## சி கா செந்தில்வேல் உடன் நேர்காணல்

த ஜெயபாலன்

# சாதியப் போராட்டம் சில குறிப்புகள்



**சாதியப் போராட்டத்தில்**
**தம் இன்னுயிர்களை இழந்தவர்களுக்கு**
**இந்நூல் சமர்ப்பணம்!**

si ka senthilveel udan neerkaanal - saathiyap pooraddam sila kurippukal / Interview / T Jeyabalan / first edition: February 2008 / pages 40 / published by: thesam publication ltd: p o box 35806, tel: 0044208 279 0354, email: thesam97@hotmail.com, website: www.thesamnet.co.uk

## அறிமுகம்:



இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றிலும் வட இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களிலும் இரண்டறக்கலந்தவர் சி.கா. செந்திவேல். 1963ல் தனது இருபதாவது வயதிலேயே கொம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1965ம் ஆண்டு முதல் தன்னை கட்சியின் முழுநேர அரசியலில் இணைத்துக்கொண்டார். இவர் 1989ம் ஆண்டிலிருந்து புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

45 வருட இடதுசாரி அரசியல் வரலாற்றையும் போராட்ட வரலாற்றையும் கொண்ட ஒரு சமூகப் போராளியான இவரின் அனுபவம் இன்றைய கால கட்டத்தில் மிக அவசியமானதாகிறது. அந்த வகையில் சி.கா.செந்தில்வேல் அவர்களின் இந்நேர்காணலை தேசம் சஞ்சிகை பிரசுரிக்கிறது.

தனது சகோதரனின் மரண இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்கு தனிப்பட்ட பயணமாக பாரிஸ் வந்திருந்த சி.கா.செந்திவேல் அவர்கள் அவரது மனத்துயரங்களுக்கு மத்தியிலும் சிரமம் பாராது இந் நேர் காணலை தேசம் சஞ்சிகைக்கு வழங்கினார். இந்நேர்காணல் ஜனவரி 6, 2008ல் பதிவு செய்யப்பட்டது. தேசம் சஞ்சிகை அவருக்கு தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

சி.கா.செந்தில்வேல் எழுதிய நூல்கள் :

1. இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்
2. புதிய ஜனநாயகமும் போராட்ட மார்க்கமும்
3. சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்.
4. கைலாசபதியும் சமூகப் பங்களிப்பும்.
5. மனிதரும் சமூக வாழ்வும்.




*இரு மணிநேரம் நீடித்த நேர்காணலும் கலந்துரையாடலுமான இச்சந்திப்பு அவருடைய பேச்சு மொழியிலேயே பெரும்பாலும் தொகுக்கப்பட்டு உள்ளது. இந்நேர்காணல் தொகுப்பை www.thesamnet.co.uk இணையத் தளத்திலும் பார்க்கலாம்.*

தேசம்: உங்களுடைய காலகட்டம் தமிழரசுக்கட்சி செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு காலகட்டம். அப்படி இருக்கையில் நீங்கள் இடதுசாரி அமைப்பைத் தேர்ந்தேடுக்க காரணம் என்ன?

அநீதிகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான உணர்வு மாண வனாக இருந்த காலத்திலிருந்தே வந்தது. அதற்குக் காரணம் நாங்கள் வாழ்ந்த கிராமம், புத்தூர். ஏனென்றால் அது மளவராயர் குடும்பம் என்று ஒரு பெரிய குடும்பம். இவர்களுக்குக் கீழ் பல்வேறு சாதிப் பிரிவினரும் உடலுழைப்பு செலுத்துபவர்களும் இருந்தனர். ஒடுக்குமுறைகள் பரவலாக இருந்தது. சாதிய ஒடுக்குமுறை அப்பட்டமாக இருந்தது.

நான் பிறந்தது வண்ணார் சமூகத்தில். எங்களுக்கு நிலம் இருந்தது. வீடு இருந்தது. ஆனால் நிலம் இல்லாத மக்களும் கூலி உழைப்பாளர்களும்

இருந்தனர். நான் அறிந்த காலம் முதல் மக்கள் பலவிதமான நிலைகளில் இருப்பதும், ஒடுக்குமுறைகள் பல வடிவங்களில் இருப்பதும், ஏன் என்ற கேள்வி ஆரம்பம் முதலே இருந்தது. ஆரம்பத்தில் கடவுளை வழிபடுவதால் மாற்றம் வரும் என்ற உணர்வு இருந்தது. காலம் செல்லச் செல்ல அந்த நம்பிக்கை குறைந்து கொண்டு வந்தது. எனது தகப்பனார் கடின உழைப்பாளி. சலவைத் தொழில் செய்வதுடன் விவசாயமும் செய்து வந்தார். அனாலும் குடும்ப வாழ்க்கையின் வறுமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. நிறை வான வாழ்க்கை என்பது கிடைக்கவில்லை.

கஸ்டத்திற்கு மத்தியில் சிறிசோமஸ்கந்த கல்லூரியில் தான் படித்தேன். அந்த பள்ளிக்கூடத்தில் என்னவென்றால் எங்களுடைய சாதி தான் கீழ்நிலையில் உள்ள சாதி. அதற்குக் கீழ்ப்படி நிலையில் உள்ளவர்களுக்கு அங்கு இடமில்லை. அதனால் சாதிய ஒடுக்குமுறை என்றது பள்ளிக்கூடத்தில் எங்களுக்கு மேல் தான் தீவிரமாக இருந்தது. அப்ப எனக்கு வர்க்கம் என்றது தெரியாது. ஆனால் ஏன் இப்படி நடத்தப்படுகிறம், கஸ்ரப்படுகிறம் என்ற கேள்வி எழுந்தது.

அப்படி இருக்கையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எனது தமையனார் அப்போது எஸ்எஸ்சி. எல்லாப் பாடத்திலும் நல்ல மார்க்ஸ் எடுத்து பாஸ் பண்ணியிருந்தார். அப்ப ஏதோ ஒரு காரணத்தை சொல்லி பள்ளிக்கூடத்தில் வைத்து அடித்தனர். இது அந்தப் பள்ளிக் கூடத்தில் தொடர்ச்சியாகவே இருந்து வந்த விசயம். அச்சம்பவத்தில் அவருக்கு காயமும் ஏற்பட்டது. அதுக்கு பிறகு எதிர்ப்பு உணர்வு இன்னமும் கூடிவிட்டது. அண்ணர் பிறகு மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வந்து படித்து, பிறகு ஒரு இன்ஜினியராக வந்தார்.

இந்த எதிர்ப்பு உணர்வுக்கு ஒரு மார்க்கம் தேவை என்றுபட்டது. இந்த காலகட்டத்தில் 1960களில் கொம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் எனக்கு அறிமுகமாகியது. எனக்கு உறவுமுறையான சூடாமணி என்ற தோழர் என்னை கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வார். எனக்கு படிக்கும் காலத்திலேயே பேச்சாற்றல் கூட. ஒருமுறை நல்லாப் பேசியும் பரிசு கொடுக்கவில்லை. இவையெல்லாம் எனக்கு உணர்வையும் உந்துதலையும் கொடுத்தது. இதற்கு எதிராக போராட வேண்டும். இதை வைச்சுக்கொண்டு மனுசன் வாழேலா து என்றுபட்டது. அந்த அடிப்படையில் தான் கொம்யூனிஸ்ட் கட்சியுடைய பிரசுரங்களும் சமத்துவமான போக்கும் இவற்றிற்கு எதிரான பேச்சுகளும் என்னை ஈர்த்தது. ஆனால் தமிழரசுக் கட்சியிலோ கொங்கிரஸிலோ இப்படி இல்லை.

அப்படி இருந்தும் 1961 சத்தியாக்கிரகம் நடைபெற்ற போது அந்த சத்தியாக் கிரகத்தில் பங்குபற்றி இருக்கிறன். கட்சி அடிப்படையில் அல்ல மாணவரகள் என்ற ரீதியில். எனக்கு உள்ளேயே இந்த ஒடுக்குமுறைக்கு

எதிரானவற்றிற்கு இடம்தேட வேண்டும் என்ற முனைப்பு இருந்தது. 1960 இலே தான் அமைப்பு ரீதியாக மாநாட்டிலே பங்குபெற்றினேன். எனக்கு பேசுவதற்கு மூன்று நிமிடங்கள் ஒதுக்கினார்கள். நான் பேசும் போது வெளிப்படுத்திய கருத்து சாதிய ஒடுக்குமுறையை இல்லாமல் செய்ய வேண்டும் என்றது. கூட்டத்திற்கு செல்வது, பங்குபற்றுவதில் ஆர்வம். ஒரு கட்டத்தில் பள்ளிக்கூடப் படிப்பில் ஒரு வெறுப்பு வந்தது. போராட்டத்தில் இறங்க வேண்டும் என்றுபட்டது. பள்ளிக்கூடம் போய் படிச்சு நல்ல ஒரு உத்தியோகம் பார்த்து நல்ல நிலைக்கு வந்து இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் என்றா படிக்கிறதுக்கே விடுறாங்களில்லை.

இந்த நிலையிலே 1964ல் கட்சி பிளவுபடுகிறது. அதுவும்கூட புரட்சிகரமான பக்கம் சார்ந்ததாகவே (சீன சார்பு) நின்றேன். சண்முகதாசனின் வரவும் அவரது பேச்சுக்களும் அரசியல் வகுப்புகளும் இருந்தது. எனது குடும்பநிலை கஸ்டமான நிலை. எனக்கு குடும்ப நிலையிலும் பார்க்க, சமூகநிலை கஸ்டமானதாக இருந்தது. 1943ல் பிறந்தனான். கட்சி உறுப்புரிமை எடுத்தது 1965 ஓகஸ்டில். கட்சி பிளவுபட்ட போது மற்றவர்கள் பாராளுமன்றப் பாதைக்குச் செல்ல இளைஞர்களும் புரட்சிகர சக்திகளும் புரட்சிகரப் பக்கம் வந்தனர்.

தேசம்: கொம்யூனிஸ்ட் கட்சியின் பிளவு சாதி எதிர்ப்பு போராட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியதா?

கட்சியின் பிளவு சாதி எதிர்ப்பு போராட்டங்களுக்கு உத்வேகத்தை அளித்தது. நாங்கள் பாராளுமன்றப் பாதையை கைவிட்டு புரட்சிகரப் பாதை யை தேர்வு செய்தவர்கள். அது போராட்டத்திற்கு உந்ததலை அளித்தது.



இந்தப் பிரிவிற்குப் பின் நடந்த மே தினக் கூட்டம் மிகப் பிரமாண்டமான கூட்டம். அது எங்களுக்கு பெரியதொரு உட்சாகத்தை தந்தது. பலதரப்பட்ட மக்களும் அணிதிரண்டு வந்தபோது திகைப்பாகவும் இருந்தது. அந்த காலகட்டத்தில் தான் சர்வதேச ரீதியாகவும் விவாதங்களும் எழுச்சிகளும் நடந்து கொண்டிருந்த காலகட்டம். போராட்டங்களும் தொடர்ந்து ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தது. அவை ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது. சர்வதேச ரீதியாகவும் எங்களை உந்தித் தள்ளிய காலகட்டம் அது.

தேசம்: தமிழரசுக் கட்சியோ தமிழ் காங்கிரஸ் கட்சியோ முன்னெடுத்த போராட்டங்கள் ஒடுக்கபட்ட மக்களுடன் சம்பந்தப்படாத போராட்டங்களே. அப்படி இருக்கையில் சாதி ரிதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் எவ்வாறு அக்கட்சிகளை நோக்கிச் சென்றனர்?

இன்றைக்கு உள்ளது போல, அன்றைக்கு அந்த மக்கள் கருத்துநிலையில் இருந்தோ, கொள்கை நிலையில் இருந்தோ அதனை ஆதரிக்கவில்லை.

அந்தக் கிராமத்தில் உள்ள ஆதிக்கசக்தி எந்தக் கட்சியை ஆதரிக்கிறதோ அதையே ஒடுக்கப்பட்ட மக்களும் ஆதரிக்கிற போக்குத்தான் இருந்தது. வாக்களிக்கும் காலகட்டத்தில் வாக்கு வங்கியாக, அதுவும் நிர்ப்பந்தத்தின் மூலமாகத் தான். தங்களுடைய சுட்டுவிரலுக்கு ஆடக் கூடியவர்களை தங்களுக்கு விரும்பியவர்களுக்கு வாக்களிக்க நிர்ப்பந்தித்தனர்.

தேசம்: யாழ்ப்பாணத்தின் சாதிய சமூக கட்டமைப்பு எப்படி உள்ளது?

நாற்பது வீதமானவர்கள் வெள்ளாளர்கள். அவர்களுக்குள் படிநிலை இருந்தாலும் அவர்கள் வெள்ளாளர்கள். முப்பது வீதமானவர்கள் இடை நிலைச்சாதிகள். மிச்சம் 30 வீதத்தினர் தாழ்த்தப்பட்ட மக்கள். இவ்வாறுதான் யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பு நிலை இருக்கிறது.

தேசம்: சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ள சாதிகள் என்று யாரை வரையறுப்பீர்கள். எந்த சமூகத்தை ஒடுக்கபட்ட சமூகம் என்று வரையறுக்கிறோம்.

சாதிகள் படிநிலையில்தானே இருந்து கொண்டிருக்கிறது. மேலிருந்து கீழ் என்றுதான் இருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை பிராமணர்கள் தான் ஆக உச்சத்தில் உள்ளனர். அடுத்ததாக வெள்ளாளர். வெள்ளாளர்களும் இடை யில் தான். தமிழ்நாட்டில் வெளாளர்களாக இருந்தார்கள். அதற்கு இடையில் அரசர்கள் இருந்திருக்கிறார்கள். மனுதர்ம சாஸ்திரத்தின்படி வெளாளர்கள் உண்மையில் சூத்திரர்கள். நான்காம் வர்ணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் இந்தியாவில நிலவுடமை சோழப் பேரரசு காலத்தில் வெளாளர்கள் நிலவுடமையாளர்களாக மேலுக்கு வருகிறார்கள். இங்கு வந்து பிராமணியம் வெளாளர்களோடு ஒரு போராட்டமும் செய்து சமரசமும் செய்கிறது. யாழ்ப்பாணத்தில பிராமணிய ஆதிக்கம் மேலுக்கு இல்லை. வெளாளர்கள் தான் ஆதிக்கம். இந்த வெளாளர்கள் வந்து நிலவு டமை வெளாளர்களாகத்தான் இருந்திருக்கினம். மற்றையது வியா பாரம். சேர் பொன் ராமநாதனுடைய மூதாதையர் இரண்டு தலைமுறைக்கு முற்பட்டவர்கள் வண்டிலில் புகையிலை உட்பட வியாபாரத்தில ஈடுபட்டவர்கள். கொலனியவாதிகளுக்கு விசுவாசமாக இருந்தவர்கள். அந்தத் தயவில தான் கொழும்பு ஏழு அந்தப் பகுதிகளில எல்லாம் நிலங்கள் வாங்கினார்கள். அதனால் தான் சேர் பொன் ராமநாதன் சகோதரர்கள் படிக்கக் கூடிய தாக இருந்தது. அதற்கு முந்தினவர்கள் படித்தவர்கள் அல்ல. வெளிநாட்டு தொடர்போடு கல்வி கற்று வரேக்க ஏற்கனவே இருந்த ஆதிக்கத்தோட சேர்ந்து வெளாளராயோ முதலியாராயோ வந்த படியால் ஆதிக்க சாக்தியானார்கள். பொருளாதாரமும் கல்வியும் இணையேக்க அந்த சாதிக்குரிய ஆதிக்கத்தைப் பெறுகிறது.

தேசம்: வெளாளரைப் போல் கரையார சமூகத்தை ஆதிக்க சமூகமாகப்

பார்க்க முடியுமா?

கரையார சமூகத்தை ஆதிக்க சமூகம் என்றதை விட இந்த படிநிலை அமைப்பிற்குள் வராத ஆட்களாகத்தான் இருப்பினம். இடைநிலைச் சாதிக்குள் தான் அவர்கள் வருவினம். வெள்ளாளர்கள் தான் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதிக்க சமூகம். எண்ணிக்கையிலும் அதிகம். முதலியார் எல்லாம் எண்ணிக்கையில் குறைவு. அந்த வெள்ளாளர்களும் பல நிலையில் இருக்கிறார்கள். நிலத்தை வைத்துக் கொண்டு ஆதிக்கம் செய்பவர்கள். உடலுழைப்பு செய்பவர்களும் இருக்கிறார்கள்.

சாதிய வகைப்படுத்தக் கூடிய அட்டவணை என்றது இலங்கையில இல்லை. அதனால சரியான புள்ளி விபரங்களும் இல்லை. தொழிலை வைத்தக் கொண்டுதானே பார்க்கலாம். அது பிற்காலத்தில மாறிவிட்டது. கமம், வியாபாரம் என்று பொதுச் சொல்லைப் போட்டால் என்ன சாதி என்று கண்டுபிடிக்க ஏலாது. ஆனால் சாதியம் இருக்கு.

தேசம்: அன்று சாதிய முரண்பாடுகள் கூர்மையடைந்திருந்த காலகட்டத்தில் இடதுசாரிகள் எவ்வாறான ஒரு கடினமான நிலையை எதிர்நோக்கினர்?

யாழ்ப்பாணச் சூழலில் சாதியத்திற்கு எதிராக நிற்பதும் பழமைவாதத்திற்கு எதிராக நிற்பதும் தமிழ் தேசியவாதத்தின் ஆரம்ப நிலைக்கு எதிராக நிற்பதும் சாதாரண விசயமில்லை. கடுமையான எதிர் நீச்சல் போட்டுத் தான் வளர்ச்சி பெற்று வந்தோம். ஏற்கனவே ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் சில ஸ்தாபனங்கள் இருந்தது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை சிறுபான்மைத் தமிழர்களின் நலன்களைப் பிரதிபலித்தது. கொம்யூனிஸ்ட் கட்சி பிளவோடு அது பலமிழந்து போய்விட்டது.

அதனால் அந்த கிராமங்களில் இருந்த இளைஞர்களும் புரட்சிகரமான சக்திகளும் புரட்சிகரமான கட்சியோடு அணிவகுத்தனர். அந்த பிளவு வந்தவுடன் தாழ்த்தப்பட்ட மக்களினது என்று தனிஇயக்கம் என்பதிலும் பல அரசியல் கோசங்களுடன் தாழ்த்தப்பட்ட மக்களினதும் விடயங்களும் பேசப்பட்டு வந்தது. இந்த நிலையில் 1964 தான் கட்சிக்குள் ஒரு விவாதம் வருகிறது. சாதிய முரண்பாடு கூர்மையடைந்து விட்டது. நாட்டிலே ஏற்பட்ட இடதுசாரி இயக்கத்தின் எழுச்சியும் சர்வதேச ரீதியாக எழுந்துவந்த எழுச்சிகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உள்ள இளைஞர்கள் மத்தியில் சிந்தனை விச்சுகளை உருவாக்கியது. அந்த வீச்சக்கள் கட்சிக்குள் பிரதிபலித்தது.

நாங்கள் ஏன் இதற்கு எதிராகப் போராடக் கூடாது? என்ற எண்ணம் ஏற்பட்டது. நாங்கள் புரட்சிகர அடிப்படையில் தானே பிரிந்து வந்தனாங்கள். பாராளுமன்றம் இல்லை, சத்தியாக்கிரகம் இல்லை. அடிக்கடி போ ராட வேண்டும் என்ற நிலையிலே தானே பிரிந்து வந்தனாங்கள். அந்த

இளைஞர்களக்கும் ஒரு உத்வேகம் இருந்தது நாங்கள் போராட வேண்டும் என்று. அது கட்சியின் மேல்மட்டம் வரை பிரிதிபலித்தது.

அப்போது ஒரு பிரச்சினை எழுந்தது. இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதா? இல்லையா? இந்த ஒடுக்கு முறைக்கு எதிராக கட்சி தலைமை தாங்கி வழிநடத்திறதா? இல்லையா? என்ற விவாதம் நடந்தது. பெரும்பாலானவர்கள் இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக போராட வேண்டும் என்றார்கள். ஒரு சிலர் சிறுபான்மையினர், இப்படிப் போராடினால் கட்சி 40 வீதமான உயர்சாதியினர் என்று சொல்லப்படுபவர்களிடம் இருந்து தனிமைப்பட்டுப் போய்விடும் என்ற அபிப்பிராயத்தை கொண்டிருந்தனர். இதை தனிய உயர்சாதி கொம்யூனிஸ்டுக்கள் தான் முன்வைத்தார்கள் என்று சொல்ல முடியாது. அரசியல் கண்ணோட்டத்தில் தான் அநத் விவாதம் நடந்தது.

இந்த விவாதத்துடைய தொடர்ச்சிதான் இந்த 1966 ஒக்ரோபர் 21, தீர்மானம். அந்த சுலோகம் என்னவென்றால், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம். தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை கட்சி முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கட்சி தீர்மானமாக எடுத்தது. ஆனால் இதில் சாதிச் சங்கத்தை அமைக்க வேண்டுமோ அல்லது சாதியின் பெயரால் செய்ய வேண்டுமோ என்றல்ல, வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையில்; இன்றைய சூழலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போராட்டம் தேவைப்படுகிறது; வரலாற்று ரீதியில் அவர்களுடைய வளர்ச்சி ஒரு போராட்டத்தின் வரலாற்றுத் தேவையின் காலகட்டத்திற்கு வந்திருக்கிறார்கள்; ஆகவே கட்சி அதற்கு தலை மை தாங்க வேண்டும் என்ற முடிவுக்கு வெகுவிரைவில் வந்தது. அப்போதான் 1966 ஒக்ரோபர் 21, எழுச்சிக்கான திகதியும் நாளும் குறிக்கப்பட்டது.

தேசம்: சிறுபான்மைத் தமிழர் மகாசபை போன்ற இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுடைய தனித்தவமான பிரச்சினையை முன்னெடுப்பதற்காக முழுமையாக ஒடுக்கப்பட்டவர்களால் அமைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அவர்கள் இடதுசாரி இயக்கங்களிற்குள் வரும்போது இவர்களுடைய வழிகாட்டிகளாக இடதுசாரி இயக்கத்தின் தலைமையை வைத்திருந்த உயர்சாதி கொம்யூனிஸ்ட்டுக்கள் இருந்தனர் என்ற குற்றச்சாட்டு உள்ளது. மேலும் தனித்துவமான அமைப்புகளுக்கு ஊடாக மக்களுடைய பிரச்சினை வைக்கப்பட்டு இருந்தால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு இருக்கும் என்றும்ளூ அவர்களுடைய சமூக சீர்திருத்த நடவடிக்கைகளைக் கூட இடதுசாரி இயக்கங்கள் செய்யவில்லை என்றும்ளூ தற்போது ஒரு கருத்து நிலவுகிறது. இது பற்றி நீங்கள் என்ன சொல் விரும்புகிறீர்கள்?

சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்பது கட்சி பிளவடைவதற்கு முன்னரே 1940க்களில் அமைக்கப்பட்ட அமைப்பு. இதில் தனிய தாழ்த்தப்பட்டவர்கள்

தான் இருந்தனர். இதிலும் பிரச்சினை இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களிலும் எந்த சாதிப்பிரிவினர் தலைமை தாங்குவது என்ற பிரச்சினை இருந்தது. அவ்வாறான சாதியக் கண்ணோட்டங்கள் வந்திருக்கிறது. அது அனுபவம். காலத்திற்குக் காலம் அதில் இருந்து விலகிப் போனவர்களும் இருக்கிறார்கள். பள்ளர் சமூகம், நளவர் சமூகம், பறையர் சமூகம் என்ற மூன்று சமூகமும் அதை சமப்படுத்திக் கொண்டுதான் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை நடத்திக் கொண்டு வந்தனர். அது நீண்டகாலம் நிலைக்கிறது கஸ்டமாக இருந்தது.

இவர்களால் ஒரு எல்லைக்கு உட்பட்ட நடவடிக்கைகளையே செய்ய முடிந்தது. உதாரணமாக 1955 வரை யாழ்ப்பாண நகரசபை தேநீர்க் கடை களில் சமத்துவம் இருக்கவில்லை. 1956ல் பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தவுடன் அங்கிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடதுசாரிகளுக்கும் ஒரு பலம். இந்த அரசாங்கத்திற்குக் கீழ் நாங்கள் சில உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்று எண்ணினர். அப்ப தேநீர்க் கடைகளில் சமத்துவத்தை ஏற்படுத்த அப்போது பிரிவடையாது இருந்த கொம்யூனிஸ்ட் கட்சியின் துணையுடன் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தான் முக்கியமான சக்தியாக இருந்து போராடியது.

இதில் எம் சி சுப்பிரமணியத்தினுடைய பாத்திரம் மிக முக்கியமானது. அவர் கொம்யூனிஸ்ட் கட்சியிலும் இருக்கிறார். சிறுபான்மைத் தமிழர் மகாசபை யின் தலைவராகவும் இருக்கிறார். கிட்டத்தட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை யில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கொம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாகவே இருந்தது. அதன் அடிப்படையில் தான் நகரங்களில் தேநீர்க் கடை சமத்துவ போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை அனைத்து கட்சிகளுக்கும் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, விசுவநாதனின் தமிழ் ஜனநாயகக் கட்சி என்று அழைப்புவிடுத்து எல்லோரதும் ஒத்தழைப்புடன் தான் தேநீர்க்கடை பிரவேசத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நடைமுறை யில் போராட்டத்திற்கு முன்னுக்கு நின்றது கொம்யூனிஸ்ட் கட்சியினரும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையினரும் தான்.

அதிலும் கூட சுபாஸ் கபே நடத்துனர் சங்கரன் என்பவர் ஒரு மலை யாளி. அங்கு கேரளாவில் கொம்யூனிஸ்ட் கட்சி பதவியில் இருந்தது. அவர் கொம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபி. அவருடைய கடையில் முதல் பிரவேசம் நடக்கிறது. அதேபோல் இரண்டு மூன்று மலையாளிகள், ஆரியகுளம் சந்தியில் ஒரு மலையாளி அவருடைய கடையிலும் அந்த பிரவேசம் நடந்தது. நான் கலந்தகொள்ளவில்லை. அப்போது சின்னாள். ஆனால் அறியக் கூடிய தாய் இருந்தது. வை.சி.கு (‘வை’ன்னா ‘சி’னா ‘கு’னா) என்றொரு கடை. அந்தக் கடையினுடைய மகன் கார்த்திகேசு மாஸ்ரருடைய மாணவன். கொம்யூனிஸ்ட் கட்சியினுடைய அங்கத்தவர். அவருடைய கடையிலும் பிரவேசம் இடம்பெற்றது.

இப்படி மூன்று நான்கு பிரதான கடைகளில் சமத்துவம் ஏற்பட்டது.

இதே காலகட்டத்தில் தான் நல்லூர் கந்தசாமி கோயிலிலும் ஆலயப் பிரவேசம் நடந்தது. இதைப் பார்த்வுடன் தமிழரசுக் கட்சிக்கு ஒன்றும் செய்ய வழியில்லை. தாங்களும் ஏதோ செய்ய வேண்டும் என்பதற்காக, அப்போது அரசாங்க அதிபராக இருந்தவர் சிறிகாந்தா; அவை இந்து மகாசபை என்று ஒரு அமைப்பு வைச்சிருந்தவை. சிறிகாந்தா போல வைரமுத்து என்றொருவர் அரசாங்க அதிகாரியாக இருந்தவர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து நல்லூர் கோயிலில், வைத்தீஸ்வரர் சிவன் கோவிலில் இவர்களைக் கூட்டிக்கொண்டு போய் ஆலயப் பிரவேசத்தை செய்தனர்.

இந்த மூன்று தேநீர் கடைப் பிரவேசமும் இரண்டு ஆலயப் பிரவேசமும் தான் முதன் முதலாக யாழ்ப்பாண நகரத்தில செய்யப்பட்டது. ஆன இந்தப் பிரவேசங்கள் அதோடையே நின்று கொண்டுது. ஆனால் தேநீர் கடைகளுக்கு போறவர்கள் சமத்துவமான கடைகளுக்கு கூடப் போகத் தொடங்கியதும் மெல்ல மெல்ல மற்றவையும் கண்டும் காணாமலும் விட்டு வந்தனர். ஆனால் முழுமையாக எல்லாக் கடைகளிலும் சமத்துவம் வந்தது என்று இல்லை. மலேயன் கபேயில கூட பெரிய போராட்டம் நடத்த வேண்டி இருந்தது.

இந்த நிலைமையில தொடர்ந்து போராட வேண்டி இருந்தது. கிராமப் புறங்களில நிலமை இன்னும் மோசமாக இருந்தது. கோவில்கள், தேநீர்க் கடைகள்: உரும்பராயிலோ, நெல்லியடியிலோ, சுண்ணாகத்திலோ சாக்குப் போட்டிருப்பார்கள் அல்லது நிலத்தில இருந்து தான் சாப்பிட வேணும். சோடா ப் போத்தலில் தான் தேநீர் கொடுப்பார்கள். இது ஒரு கற்பனை பண்ண முடியாத ஏற்றத்தாழ்வு.

1966 ஒக்ரோபர் எழுச்சிப் போராட்டங்களுக்கு முதல், தமிழர்கள் மத்தியில் இரண்டு தமிழர்கள் இருந்தவர்கள். ஒரு தமிழர் நிலத்தில இருந்து போத்தல்ல தண்ணி குடிக்கிற தமிழர்; மற்றையவர் கதிரையில இருந்து பித்தளைப் பேணில தேநீர் குடிக்கிற இன்னொரு தமிழர். இந்த இரண்டு தமிழர் என்ற நிலை நீடிக்கிற வரை தமிழர்களுக்கு விடுதலை விமோசனம் கிடையாது.

இந்த நிலைமைகளில் தான் 1966 ஒக்ரோபர் எழுச்சி ஏற்பட்டது. இந்த எழுச்சி ‘சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்.’ கொம்யூனிஸ்ட் கட்சி தான் அதை ஏற்பாடு செய்தது. அதை இன்றைக்கு திரித்து சும்மா வேற வேற விதமா சொல்கிறார்கள். தான் எழுந்தவாரியான எழுச்சியுமல்ல. திட்டமிடப்பட்ட எழுச்சி. யாழ்ப்பாணம் முத்தவெளியில பொதுக் கூட்டம். சுண்ணாகத்தில ஊர்வலம். சுண்ணாகத்தில ஊர்வலத்தை ஏற்பாடு செய்யக் காரணம், சுண்ணாகம் பிரதேசம் இடதுசாரிகள் செல்வாக்கு கூடின இடம். சாதிய ரீதியில் கோவிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். பொலிஸ் அனுமதியை மீறி ஊர்வலம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

எம் சி சுப்பிரமணியம், டி டி பி ஜெகநாதன் இவர் கட்சியைச் சேராத வர். ஒரு பொதுமகன். சூடாமணி போன்றவை முன்னணியில போனவர்கள். நான் அப்ப கட்சியின் வாலிபர் அணியில இருக்கிறன்.

ஆரம்பித்த அந்த எழுச்சி அதைத் தொடர்ந்து முத்தவெளியில் பெரிய கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அதில் சண்முகதாசன் கட்சியின் சார்பாக ஒரு அறைகூவல் விடுத்தார். இனிமேல் தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைத்தனமாக சீவிக்க முடியாது. அடித்தால் திருப்பி அடி! ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தை கொடுப்பதை பின்பற்ற முடியாது. போராட்டப் பாதையில் முன்னேற வேண்டும். கொம்யுனிஸ்ட்கட்சி அதற்கான முன்னெடுப்பகளைச் செய்தது.

தேசம்: சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் பின்னர் ஏன் தொடர முடியாமல் போனது?

அப்படியில்லை. பல கூட்டங்கள். இந்த ஊர்வலம் தாக்கப்பட்டதைக் கண்டித்தே இங்கே இருந்தே சுண்ணாகத்தில் இருந்து ஊர்வலம் நடத்தினார்கள். தொடர்ச்சியான இயக்கமாகப் பரவியது. முதல் முதல் உரும்பராயில் ஒரு தேநீர்க்கடை பிரவேசம். முதல்ல பிரச்சினை பண்ணிணாங்கள். பிறகு குடுத்தாங்கள். ஆனா கடைகளைப் பூட்டிப்போட்டு போனவை தான் கூட. அந்த கிராமத்தில அதை ஒரு போராட்டமா எடுக்கேலது. ஏனென்றால் இடதுசாரிக ளின் பலம் கூட, பிற்போக்கு சக்திகளும் பலவீனமாக இருந்தனர்.

ஆனால் சங்கானையில் நிலமை வித்தியாசம். அதில நானும் கலந்துகொண்டனான். சில கடைகள் பூட்டிவிட்டார்கள். ஒரு கடையில கடைக்காரர் கத்தியை தூக்கிவிட்டார். சங்கானைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் பொலிஸ் வந்து அதில இரண்டு மூன்று பேரை பிடித்துச் சென்றது. சாம் முத்தையா. கோவிய சமூகத்தைச் சேர்ந்தவர். கொம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரமானவர். தேநீர் கடையில் தேத்தண்ணி தர மறுத்தவர்கள் அவருடைய சொந்தக்காரர். எங்கட தோழர்களை பிடிச்சுக் கொண்டு போனதும் அவர் பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போய் வாதாடி அவர்களை விடுவித்தார்.

அன்று இரவு அவருடைய வீட்டை உடைத்து நாசம்பண்ணி விட்டார்கள். நிச்சாமம் என்ற கிராமத்திற்கும் போய் இரவு இரவாய் நாசம் பண்ணினார்கள். அதில ஒருவர் இறந்தார். அவர் எங்களோடு ஊர்வலத்தில் பங்குபற்றிய ஒரு உணர்வாளன். மற்றவர்களுக்கு காயம். கட்சி இதை எதிர்பார்க்கவில்லை. இந்தத் துப்பாக்கிச் சூட்டை தடுக்கிறதற்கு என்ன தந்திரோபாயம் என்றால்; தோட்டங்களில் முயல் போன்றவற்றை அடிக்க ஓட்டைகள் போட்ட இரும்பு இருக்கும். அதற்குள் கந்தக வெடிமருந்தை வைத்து ‘ட’ பட உள்ள கம்பியை அடிக்க வெடிக்கும். இரவிரவாய் அந்த வெடியை அடிச்சுத்தான் இவன்களும் சுடுறான்கள் என்ற பயத்திலதான்;

வந்த கும்பல தாக்காட்டினது. இல்லாவிட்டால் இன்னும் பல பேரை கொலை செய்திருப்பார்கள். இந்த அளவுக்கு அந்த மக்கள் தாங்களாகவே அந்த தந்திரோபாயத்தை கைக்கொண்டனர். விடியும் வரை தாக்காட்டினர். சாதி வெறியர்களும் பொலிசும் சேர்ந்து தான் இதைச் செய்தனர். விடிந்த பிற்பாடு பிரச்சினையில்லை. கட்சியில் எல்லோரும் கூடி முடிந்த அளவு ஆயுதங்கள் சாப்பாடுகள் கொண்டு சென்றோம்.

நிச்சாமம் கிராமம் வட்டுக்கோட்டைத் தொகுதி. தமிழரசுக் கட்சியின் இடம். தமிழரசுக் கட்சி எந்த ஆதரவுப் போராட்டமும் செய்யவில்லை. அமிர்தலிங்கம் தானே வாய்வல்லமை உடையவர். அவரே பாராளுமன்றத்தில ஒரு மோசமான அறிக்கைதான் கொடுத்தவர். அங்க சாதிப் போராட்டம் இல்லை என்று. அப்ப கம்பகா பாராளுமன்ற உறுப்பினர் பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவர். முற்போக்கானவர். அவர் உடனடி யாக யாழ்ப்பாணம் வந்து எரிக்கப்பட்ட வீடுகள் எல்லாம் போய் பார்த்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தவர். இதுதான் யாழ்ப்பாணத்தில் நடக்கிறது என்று சொன்னார். சங்கானைப் போராட்டம் மூன்று வருடம் தொடர்ந்தது. சங்கானையைத் தொடர்ந்து மற்ற கிராமங்களுக்கும் தாவிச்சுது.

இந்த காலகட்டத்தில கட்சிக்கு ஒரு தேவை வந்திட்டுது என்னவென்றால் இந்த போராட்டத்தை எப்படி? எந்த வடிவத்திலே? எந்த தந்திரோபாயத்தின் மூலமாக முன்னெடுக்கிறது? என்று. இந்தக் கட்டத்தில் தான் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், ஒரு ஐக்கிய முன்னணி ஸ்தாபனமாக; தனிய தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பாக தீண்டாமைக்கும் சாதியத்திற்கும் எதிராக; சகல தாழ்த்தப்பட்ட மக்களும், உயர்சாதியினரில் இவற்றிற்கு எதிராக நிற்கக் கூடிய வர்க்க சக்திகளும், முற்போக்காளர்கள், ஜனநாயக சக்திகள் எல்லாரையும் இணைத்த ஒரு அமைப்பாகத்தான் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1967ல் ஆரம்பிக்கப்பட்டது.

கொம்யூனிஸ்ட் கட்சி தான் அதனுடைய வழிகாட்டி. கொம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு வெகுஜன இயக்கம். அதற்கு எஸ் சி என் நாகரட்ணம் தலைமை வகித்தார். உபதலைவராக மாஆன் முத்தையா, டொக்டர் சீனிவாசன் அவரெல்லாம் உயர்சாதி எனப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். கட்சிக்குள் இருந்தவர்களும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் இருந்தனர். ஜனநாயக அமைப்பான இந்த இயக்கத்தின் தாங்கு சக்தியாக முன்னியாக இருந்தது கொம்யூனிஸ்ட் கட்சி இளைஞர்களும் ஆதரவாளர்களும் தான்.

அது வைத்த சுலோகம் தான் ‘ஆலய தேநீர்க் கடைகள் திறக்கட்டும் சமத்துவம் ஓங்கட்டும்’ என்றது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முதல் மாநாடு 1967 ஒக்ரோபர் 21 முதல் வருட நினைவாக ஆரம்பிக்கப்பட்டது. சின்னர் கார்த்திகேசு அரங்கில் யாழ் மாநகரசபை மண்டபத்தில். இந்த போராட்டங்களின் ஊடாகத்தான் எங்களைப் போன்ற இளைஞர்களின்

வளர்ச்சியும் வந்தது. சகலதையும் தாங்கி, பசி, பட்டினி எல்லாம் எங்களுக்கு பிரச்சினையா இருக்கேல்ல. போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இப்படியான காலகட்டத்தில 1968ல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தான் இதற்கு அறைகூவல் விட்டது. இதுவும் அந்தப் பகுதியில் உள்ள கிளைதான் அதற்கான முதல் கடிதத்தை அனுப்பியது. ஏனென்றால் வெளியூர் ஆக்கள் வந்துவிடிவினம் என்று ஒரு பிரச்சாரம் செய்வினம் எல்லே. என்னென்றால் உள்ளூராக்கள் பேசாமல் இருக்க வெளியாக்கள் வந்து கலகம் செய்யீனம் என்ற பிரச்சாரம் செய்வார்கள் என்றதால.

தேசம்: அந்தக் காலத்து கொம்யூனிஸ்ட் கட்சியின் வெகுஜன இயக்கத்திற்கான அடிப்படை மூலதனம் பொருளாதாரக் கட்டுமானம் எதைச் சார்ந்து இருந்தது?

மக்களை சார்ந்து தான் இருந்தது. ஒரு சந்தர்ப்பத்திலையாவது கொள்ளையடிக்க வேண்டும் என்றோ, பணம் சம்பாதிக்க வேண்டும் என்றோ கட்சி எண்ணவில்லை. அப்ப நான் கட்சிக்கு உள்ளுக்கு வந்துவிட்டேன். வாலிபர் இயக்கத்தின் இணைச் செயலாளரில் ஒராள். மக்களிடம் நிதி சேகரிக்கிறது. எஸ் சி என் நாகரட்ணம், டானியல் போன்ற வசதியானவர்கள் தங்கள் பங்களிப்புகளைச் செய்தனர். கட்சி யாருக்கும் நிதி கொடுப்பதில்லை. நிதி சேகரிப்பில் தான் இயக்கம் நடந்தது. அந்தந்த பகுதியில் உள்ளவர்கள் தான் நிதி சேகரித்து வாறதே தவிர, யாரையும் மாநாட்டுக்கோ கூட்டத்துக்கோ காசு கொடுத்து கூப்பிடுவதிலை.

கிட்டத்தட்ட 1966 முதல் 1971 ஏப்ரல் கிளர்ச்சி (ஜேவிபி) வரை இந்தப் போராட்டங்கள் வலு உச்சமாகத்தான் இருந்தது. அதோடை சங்கானையில கூட 3 வருசத்திற்குப் பிறகு சமத்துவமாக தேநீர் கடையெல்லாம் திறந்து விட்டார்கள். அது போல அச்சுவேலியும் போராட்டம் நடந்து திறந்துவிட்டார்கள். மாவிட்டபுரத்தில் ஒருமுறை போராட்டம் நடந்தது. அடுத்த முறை கோயிலை பூட்டி வைச்சிருந்தினம். அதுக்கு அங்காள அவைக்கு பூட்டி வைச்சிருக்க முடியவில்லை. பொருளாதார நெருக்கடி, நீதிமன்றம் வரை சென்றார்கள். நீதிமன்றத் தீர்ப்பும் சுந்தரலிங்கம் தடுத்தது பிழை என்றுதான் வந்தது. வெகுஜன ரீதியான கருத்துகளும் பரவியது. அவையாள தாக்குப் பிடிக்க முடியேல்ல எல்லாக் கோயில்களும் சன்நதி உட்பட பிரதானமான பெரும் கோயில்கள் எல்லாம் திறக்கப்பட்டவுடன, சின்னக் கோயில்கள் எல்லாம் படிப்படியா திறந்துவிட்டனர். இந்த போராட்டத்தின் வீச்சால் நாங்கள் பங்கு பெற்றாத, நாங்கள் தலையிடாத பல தேநீர் கடைகள் தாங்களாகவே திறந்துவிடக்கூடிய சூழல் ஏற்பட்டது.

நெல்லியடியில் கன்பொல்லை என்ற கிராமத்தில் நடந்த போராட்டம் உக்கிரமானது. இதே காலகட்டத்தில சாதிவெறியர்கள் எங்கட போராடின

மக்களைச் சுட்டுகொலை பண்ணி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில 15 பேர் வரை 1966 - 1971 காலகட்டத்தில அதில இறந்திருக்கினம். அதே போல சாதி வெறியர்களும் எங்களால திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்ட சம்பவங்களும் இருக்கு. இரண்டும் மாறி மாறி நடந்திருக்கு. சட்டரிதியான வழக்குகளும் நடந்திருக்கு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சி நிதான-மான தந்திரோபாயங்களைக் கையாண்டதால் யாரையும் தூக்கு மேடைக்கு அனுப்பவில்லை. குறுகிய கால சிறைத்தண்டனைக்கும் அனுப்பாத மாதிரித்தான் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மற்றது போராட்டம் குறுகிய சாதிப் போராட்டமா குறுகிப் போகாமல் கட்சி கண்காணித்து வந்திருக்கிறது.

ஒருமுறை கொஞ்சப் பெடியல் ஐயர் வர அவரைப் பிடித்து அவற்றை குடுமி யையும் அறுத்து பூநூலையும் அறுத்துப் போட்டினம். இதை அனுமதித்தால் பிழையாய் போய்விடும். அவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு அந்த கிராமத்து இளைஞர்களால் விசாரிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டது.

நெல்லியடியில் ஒரு பெரிய சம்பவம், சாதி வெறியர்கள் எல்லாம் சேர்ந்து சந்தைக்குள் மீன் வித்த பெண்களையெல்லாம் மீன் கடகங்களை எறிந்து அடித்து உடலின் மேல் துணிகளையெல்லாம் இழுத்து படுகேவலப் படுத்திச்சினம். தோழர் சிவராஜா மீன் வெட்டுற கத்தியோட எங்கட தோழர்களும் சந்தைக்குள்ள இறங்கி அவைய பின்வாங்கச் செய்துதான் பிரச்சினையை முடித்தது.

பிறகு அந்தக் கிராமத்தில, ஞாயிற்றுக் கிழமைகளில் அந்தப் பக்க ஒழுங்கையால உயர்சாதி பெண்கள் சேர்ச் ஒன்றுக்கு போறவை. இவைக்கும் சாதி வெறியர்களுக்கும் சம்பந்தமில்லை. இவை வெள்ளாளர். கொஞ்ச இளைஞர்கள் சேர்ந்து இரகசியமா திட்டம் போட்டிருக்கினம், இந்தப் பொம்பிளையல அடித்து நகைகளைப் பறித்து போராட்டத்துக்கு பயன்படுத்த எனத் திட்டம் போட்டினம். இது கட்சித் தலைமைக்கு தெரிந்து, நான் அந்த இடத்திற்கு அனுப்பப்படுறன். அவை சேர்ச்சுக்குப் போறதற்கு முன்னமே வேறு பாதையளால் அங்கு போய் கட்சித் தோழர்களுக்கு விளங்கப்படுத்தி சனத்திற்கு பாதுகாப்பு கொடுத்து அனுப்பி வைத்தோம்.

பிறகு அவை போய் பிரச்சாரப்படுத்தத் தொடங்கீட்டினம். நீங்கள் தான் சாதியில குறைஞ்ச ஆட்கள். வேடர். இது சனம் பாவிச்ச வார்த்தை. அவங்கள் மனுசர். நாங்கள் போய்வர ஒரு பிரச்சினையும் நடக்கேல்ல என்று சொல்லி பிரச்சாரம். மாறி நடந்திருந்தால்?

போராட்டத்தின் சின்னச் சின்ன விசயங்களையும் கட்சி அவதானித்து நெறிப்படுத்தியது அந்த போராட்டங்களின் வெற்றிக்கு இட்டுச்சென்றது.

தேசம்: இந்தப் போராட்டங்களக்கு அப்பால் கருத்தியல் சார்ந்து தத்துவார்த்த ரீதியான கல்வியூட்டல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டதா?

அதெல்லாம் நடந்தது. அரசியல் ரீதியான போதனைகள் வழங்கப்பட்டது. அரசியல் வகுப்புகள், தத்துவார்த்த வகுப்புகள் எல்லாம் நடந்தது. கிராமங்களுக்கு உயர்சாதி கட்சித் தோழர்கள் போகேல்லை என்றெல்லாம் இல்லை. எல்லாரும் போவார்கள். நெல்லியடி கிராமம் முழுக்க வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால் அங்க போராட்டத்தில முன்னுக்கு நிக்கிறதும் அவைதான். மாவிட்டபுரத்தில கோயிலில போராடேக்க அவையும் தான் முன்னுக்கு நிண்டவை. எஸ் சி என் நவரட்ணத்தை மயிரிழையில் காப்பாற்றியது சிவராஜா போன்ற கட்சித் தோழர்கள்.

தேசம்: மதமாற்றம் சாதியத்திற்கான தீர்வு என்று சொல்லி கன்பொல்ல கிராமத்தில் பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான காரணம் என்ன? அதற்கான நம்பிக்கை இருந்ததா?

அப்படி பௌத்த மதம் சாதியத்தை ஒழிக்கும் என்றெல்லாம் இல்லை. அது என்னவென்றால் பௌத்த சங்கம் என்று சொல்லி ஒரு சங்கத்தை வைரமுத்து என்ற ஆசிரியர், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் உருவாக்கினார். வட இலங்கை பௌத்த சங்கம். இந்த பௌத்த சங்கம் அரசாங்கத்திடம் இருந்து சில சலுகைகளைப் பெறக்கூடிய சங்கமாகவே இருந்தது.

அந்தச் சங்கம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வி வளர்ச்சிக்கு என்று நான்கு பாடசாலைகளை உருவாக்கியது. உரும்பராயில் ஒன்று கன்பொல்லையில் ஒன்று, எங்கட கிராமம் புத்தூரில ஒன்று, காரைநகரில் ஒன்று என்று நாலு பாடசாலைகளை உருவாக்கியது. தொண்டர் ஆசிரியர்களாக ஆசிரியர்களை நியமித்தது. எங்கட கிராமத்தில புத்தூரில சிறிசோமஸ்கந்த கல்லூரியில தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்கிறதில்லை. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பௌத்த பாடசாலையை ஆரம்பித்தார்கள்.

தேசம்: பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்ததன் நோக்கம் என்ன?

அரசாங்கத்தின் சலுகையைப் பெறலாம் என்ற நோக்கம்தான்.

தேசம்: பௌத்தம் சாதியத்தை எதிர்க்கிறது என்பதற்காக பௌத்தத்தை தழுவும் நிலை இருந்ததா?

அப்படியெல்லாம் இல்லை. அங்கு அப்படி மாத்தினதும் இல்லை. சனம் பௌத்தத்திற்கு மாறினதும் இல்லை. பௌத்த சங்கத்தை சேர்ந்த ஆட்கள் சிலபேர் மாறினவை. சனம் மாறவில்லை. தங்களுக்கு ஒரு பாட சாலை வருகுது, கல்வி வசதி வருகுது என்ற சலுகை அடிப்படையில அதை ஏற்றதே தவிர பௌத்தத்திற்கு மாறினது என்று சொல்ல முடியாது.

தேசம்: குறிப்பிட்ட தொகையான இளைஞர்கள் கன்பொல்லையில் இருந்து பௌத்த துறவிகளாக ஆயினர் என்று கூறப்படுகிறதே?

இல்லை. இல்லை. அது என்ன நடந்தது என்று சொன்னால், கொஞ்ச மாணவர்களை இந்த பௌத்த சங்கம் தேர்ந்தெடுத்து தென்னிலங்கைக்கு கூட்டிக் கொண்டு வந்தது. அங்கு அவர்களுக்கு கல்வியும் வழங்கி, பௌத்தமத போதனைகளும் செய்வதற்கு முயன்றனர். ஆனால் அது தோல்வியடைந்து போய்விட்டது. இரண்டு மூன்று மாதங்களிலேயே அங்கு நிற்க முடியாமல் எல்லோரும் ஓடிவந்து விட்டனர். யாரும் அங்கு பௌத்த துறவியாக ஆகவில்லை. ஆனால் கன்பொல்லையில் ஒரு அரச மரத்தையும் ஒரு சின்ன பௌத்த கோவிலையும் ராஜகிராமம் என்ற இடத்திலை உருவாக்கினர். எங்கட கிராமத்தில புத்தூரிலோ மற்றைய இடங்களிலோ அப்படி ஒன்றும் நடத்தவில்லை. அரச சலுகைகளைப் பெறுவதற்கான தந்திரோபாயமாகவே இது பயன்படுத்தப்பட்டது.

தேசம்: கோட்பாட்டு ரீதியாக பௌத்தம் சாதியத்திற்கு எதிரானது என்ற பார்வை இருந்ததா? கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் அப்படியான பார்வை இருந்ததா?

இல்லை. அப்படி பார்க்கப்படவில்லை. கொம்யூனிஸ்ட் கட்சி அந்தப் பார்வையை எதிர்த்தது. கட்சிக்குத் தெரியாமால் பௌத்த சங்கத்தில் தொடர்புபட்ட கொம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்துவம் பெற்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது. மாத மாற்றத்தால் சாதியத்தை ஒழிக்க முடியாது என்றது தான் கொம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலைப்பாடாக இருந்தது.

தேசம்: சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று இருந்தாலும் தேநீர்கடைப் பிரவேசம், ஆலயப் பிரவேசம் என்பதெல்லாம் பெரும்பாலும் நகரப் புறங்களில் பெரிய ஆலயங்களிலேயே நடைபெற்றது. அங்கு யார் யார் என்று அடையாளம் காண்பது கட்டுப்படுத்துவது முடியாத காரயமாக இருந்தது. ஆனால் கிராமம் புறங்களில் இந்த நிலை இருக்கவில்லை. அங்கு தொடர்ந்தும் புறக்கணிப்பு இருந்து வந்தது. இன்றும் வீடுகளில் வேலைக்கு செல்லும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு பிறம்பான கிளாசில் தேநீர் கொடுக்கும் முறையே நிலவுகிறது. இதனை எப்படி இல்லாமல் செய்வது?

தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களால் காலப்போக்கில் தீண்டாமை ஒழிந்துவிட்டது என்றால் இல்லை. தீண்டாமை முற்றாக அழியவில்லை. இந்த போராட்டங்களால் பொது இடங்களில் இருந்த பாரபட்சங்கள் தான் அழிக்கப்பட்டது. அதனால் இந்த மூன்றில் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் அந்தஸ்து ஏற்பட்டது. நாங்கள் யாருக்கும் 2ம் தரமானவர்கள் அல்ல என்ற நிலை உருவாக்கப்பட்டது. பொருளாதாரத்தாலோ, கல்வியாலோ அல்ல சாதிய ரீதியில் நாங்கள் 2ம் தரமானவர்கள் அல்ல என்ற சமூக

அந்தஸ்து நிலை வந்தது அவ்வளவு தான். அதற்கு மேல் நீங்கள் சொன்ன மாதிரி வீடுகளில் நடக்கிறதையோ அடிமை குடிமை பாராட்டப்படுவதையோ திருமணங்களிலையோ அது இன்னமும் இருக்கிறது.

கருத்தியல் ரிதியில் சாதியம் அழிக்கப்படவில்லை.

தேசம்: அதற்கான என்ன முயற்சி எடுக்கப்பட்டது?

இந்தப் போராட்டம் முடிந்த கையோடு 1971 ஏப்ரல் கிளர்ச்சியோட எங்கள் கட்சி நசுக்கப்படுகிறது. பிடிபடுவதில்லை என்ற முடிவோடு என்று தலை மறைவாகி இருந்தோம். இந்த கிராமங்கள் தான் எங்களுக்கு அடைக்கலம் தந்தார்கள். ஒரு வருசத்திற்கு மேல் தலைமறைவாக இருந்தோம்.

இந்தப் போராட்டம் முடியிற காலகட்டத்தில ரெண்டு விடயம் நடக்கிறது. ஒன்று கட்சி மீண்டும் பிளவடைகிறது. ரெண்டாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடுத்த கட்டமாக எதை முன்னெடுப்பது என்பது. கட்சி தீர்மானித்தது என்னவென்றால்; நிலம் இது அவர்களுடைய முக்கிய பிரச்சினை. பொருளா தாரம் மற்றையது. கல்வி அத்தோடு பண்பாட்டு ரீதியான வளர்ச்சி. இந்த நான்கு விசயங்களும் முக்கியமானவை என்று அடையாளம் காணப்பட்டது. எலாவற்றிற்கும் போராடித்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆனால் அதற்கான கோரிக்கைகளை முன் வைத்து இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும் என்று கட்சியளவில் தீர்மானிக்கப்பட்டது.

தேசம்: தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தினதும் கொம்யூனிஸ்ட் கட்சியினதும் இந்த போராட்டங்களின் பின் யாழ்ப்பான கல்விச் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சியில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டது?

இந்த போராட்டங்களிற்குப் பிறகு பல பாடசாலைகள் திறக்கப்பட்டது. 1975ல் சிறிசோமஸ்கந்தா. அதே போல அரைகுறை மனதுகளோடு ஆசிரியர்களை அனுமதிக்காத பாடசாலைகளில சில ஆசிரியர்கள் மாற்றம் பெற்று வரக்கூடியதான வாய்ப்புகள் ஏற்பட்டது. தேநீர்க் கடை, ஆலயப் பிரவேசம் ஆகியவற்றிற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில ஒரு உத்வேகம் வந்துவிட்டது. கல்வியில் முன்னேற வேண்டும். பொருளாதாரத்தில முன்னேற வேண்டும் என்ற சிந்தனைகள் மூலம் ஒரு சமூக ரீதியான பரிமாணத்தை கொண்டுவந்தது.

தேசம்: யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கிறிஸ்தவ பாடசாலைகள் தான் சாதியத்தின் இறுக்கத்தைத் தளர்த்தின என்ற அபிப்பிராயம் உள்ளது. அது பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ஆரம்பகாலத்தில அதில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்தது. அதை மறுக்கேலாது. சில பாதிரிமார்கள் முன்முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆனால்

அங்குகூட ஆசிரியராகப் போனவர்கள் வெள்ளாளர்கள். அவர்கள் அந்த பாகுபாட்டை செய்திருக்கிறார்கள்.

அப்படி எங்கட கட்சித் தோழர் படிப்பில ஆற்றல். உயர்வகுப்பில படித்துக் கொண்டிருக்கும் போது ஏதோ வெளியில பார்த்து இருக்கிறார். அதற்கு ஆசிரியர் ‘என்ன முட்டி தொங்குதோ என்று பார்க்கிறியோ’ என்று கேட்டிருக்கிறார். நாற்பது மாணவர்களுக்கு முன்னால. இப்படித்தான் அங்கும் நிலைமை இருந்தது. இது மாணவனில் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இதுகளால் கல்வியை விட்டவர்கள் கன பேர். சிறிசோமஸ்கந்தாவில ‘என்னத்துக்கு படிக்கிறியல்’ என்று கேட்பார்கள். இதை அப்பால உள்ள மற்றவர்களால் உணர முடியாது. இவை என்ன சொல்லுவினம். ‘அப்பிடிச் சொன்னாலும் என்ன நீ படிச்சிருக்கலாம் தானே’ என்று. ஆனால் உளவியல் ரீதியில எவ்வளவு பாதிப்பு என்றது அவைக்குத் தெரியாது.

இன்றுவரை சிறிசோமஸ்கந்த கல்லூரியில் ஒரேயொரு ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்தான் கற்பிக்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். நாசுக்காகச் சமாதான காலத்தில சென்று மேல் மட்டங்களில அலுவல் பார்த்து இருக்கிறார்கள். 75 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிற ஒரு பாடசாலை யில ஒரேயொரு தாழ்த்தப்பட்ட ஆசிரியர். அவரும் தன்னை மறைச்சு அப்படி இப்படி என்று இருக்கிறார். இப்படிக் கன பாடசாலைகள். அதிபராக வர முடியாது.

இன்றைக்கு தேசியப் பாடசாலை என்று சொல்லப்படுகிற பெரிய பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் யாரும் அதிபராக வர முடியாது. மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வர முடியாது. ஒரு அதிபர் இறந்தவர். திடிரென்று ஒன்றும் செய்ய முடிவில்லை இவரை அதிபராக போட்டார்கள். அவரையே நிரந்தர அதிபராகக் கொண்டு வரலாம் என்ற அபிப்பிராயம் மாணவர்கள் மத்தியில் இருந்தது. பழைய மாணவர் சங்கம் கூடி இவரை எங்களுடைய பழைய மாணவராய் இருக்க வேணும் என்ற சட்டத்தை வைத்திருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவரைக் கூட அதிபராக அனுமதிக்க அவர்கள் தயாராக இல்லாத நிலைதான் இன்றைக்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரில இருக்கிறது. இது யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில காலம் காலமாக பாரம்பரியமாக உள்ள நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. சுருக்கமாகச் சொன்னால் அங்கு சாதியம் இன்னமும் இருக்கிறது.

ராஜதுரை என்று ஒரு அதிபரைச் சுட்டார்கள். அவர் தாழ்த்தப்பட்டவர். கல்வி நிலையில ரொம்ப உச்ச நிலைக்கு வந்த ஒருத்தர். நல்ல நிர்வாகி. சென்றல் கொலிஜ்யை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்தவர். அவருடைய காலகட்டத்தில மாணவர் தொகையும் கூட கல்வித்தரமும் கூட. மாணவர்கள் இடம்பெயர்ந்து வந்தபோது வா படி என்று சொல்லுவார். எனக்கும் நெருங்கிய

நண்பர். எதிர்நீச்சல் போட்டுத்தான் அந்த நிலைமைக்கு வந்தவர். தனிப்பட்ட காரியங்கள் எல்லாரிடமும் இருக்கும். அதற்காக அவருடைய உயிரைப் பறிக்கிறதா?

முக்கியமான காரணம் அவர் மந்துவில் கிராமத்தைச் சேர்ந்தவர். இந்த மந்துவில் கிராமம் ஒரு காலகட்டத்தில சாதியப் போராட்டத்தில மிகவும் முன்நின்ற கிராமம். வஞ்சம் தீர்க்கப்பட்டது போலத் தான் அது நடந்தது. நெருக்கடியான காலகட்டத்தில அவர் வடபகுதிக்கான அதிபர் சங்கத்தினுடைய தலைவராகவும் இருந்திருக்கிறார். ஏனென்றால் தங்களுக்கு தேவை வரேக்குள்ள. பல்கலைக் கழகத்தின் செனட்டிலும் இருந்திருக்கிறார். தங்கடை தேவை முடிந்து. சமாதானம் வந்த உடன அவரைத் தேவைப்படேல்ல. கோபதாபத்தை தீர்த்துக் கொண்டார்கள்.

சீ வை தாமோதரம்பிள்ளையை தமிழ் அறிஞர் என்றும், மூதறிஞர் என்றும் தமிழுக்கு தொண்டு செய்தவரெண்டும் வெளியில போற்றப்படுகிறது. ஆனால் அவர் பிறந்த மண்ணில சிறுப்பிட்டியில அவருக்கு ஒரு சின்ன சிலைகூட இல்லை. காரணம் என்ன என்றா, அவர் வெள்ளாளரில மிகக் குறைந்த வெள்ளாளர். அந்த ஊரில இருந்த ஆதிக்க வெள்ளாளர் அவரை தங்கட ஊரைச் சேர்ந்த கல்விமான் என்று ஏற்றுக்கொள்றதிற்கு தயாரில்லை. அவற்றை தகப்பன்ர தகப்பன் எல்லாரும் வண்டில் வைச்சு கூலிக்கு தோட்ட வேலைக்கு போற வெள்ளாள சமூகத்தை சார்ந்தவர்கள். அதனால் தான் அவற்றை தகப்பன்ர தகப்பன் எல்லாம் கிறிஸ்தவாராக மாறித்தான் இவருக்கு கல்வி கொடுபடுகிறது.

பாருங்க அந்த அநியாயத்தை. அதைக்கூட நினைவுபடுத்துறதற்கு அந்த மனநிலை வரேல்லையே. அங்கிருந்த சனசமூக நிலையத்திற்கு வெளி யில இருந்து வந்து மணம் முடித்த தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சி வை தாமோதரம்பிள்ளை சனசமூக நிலையம் என்று பெயரை மாற்றினார். நெருக்கடி பிறகு அவர் கனடாவுக்கு போய்விட்டார். அவர் போன அடுத்த மாதமே திருப்பியும் சரஸ்வதியோ என்னவோ சனசமூக நிலையம் என்று மாற்றிப் போட்டார்கள். கைலாசபதி பக்கம் பக்கமாக கட்டுரை எழுதுறார் சி வை தாமோதரம்பிள்ளை செய்த தொண்டைப் பற்றி. ஆனா அந்த ஊரில உள்ள ஆதிக்க சாதிக்கு அதை உள்வாங்கிக் கொள்ள விருப்பமில்லை.

அந்தப் பகுதியில சமாதான காலத்தில போறன் ஒருத்தர் வந்து எனக்கு சொல்லுறார், அவர் ஒரு வயது போன ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒருவர். என்னை, கட்சியைத் தெரியும். ‘பார் தம்பி, கிராயில நடராஜன் இதுக்குள்ள காணி வாங்க நிக்கிறான்’ என்று. கிராய் நடராஜன் சீ வை தாமோதரம்பிள்ளையின் ஊரைச் சேர்ந்த ஆள். ‘அவனோட நாங்க என்னெண்டு இருக்கிறது’. அவரும் வெள்ளாளர் நீங்களும் வெள்ளாளர் என்றா ‘உந்தக் கதை பேசாதை. அவன் கிராயான். அவனுக்கு பக்கத்தில

என்னெண்டு இருக்கிறது. அவனெண்டு எங்களுக்கு பக்கத்தில காணி வாங்கி வீடுகட்டுறது. வெளிநாட்டுப் பணம் வந்தோன்ன எங்கட நிலையை நாங்கள் விடத் தயாரோ.' ஆள் சாகப் போகுது ஆனா அந்த ஆதிக்க கருத்த பிள்ளைகளிட்டை குடுத்துட்டுதானே ஆள் போகப்போகுது. சின்னச் சின்ன மாற்றங்கள் இருக்குமே தவிர இது தொடரும்.

தேசம்: 1972க்குப் பிறகு ஏற்பட்ட தமிழ் தேசியப் போராட்டதின் போக்கு சாதியப் போராட்டங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?

தமிழீழக் கோரிக்கை வைக்கிறதோட சாதிய முரண்பாட்டின் சில அம்சங்கள் தீர்வுக்கு கொண்டு வரப்படுகிறது. அதனால சாதியப் போராட்டம் 2ம் நிலைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கால தேசிய இன ஒடுக்குமுறை கூடுகிறது. அத்தோட தமிழீழக் கோரிக்கை முன் வைக்கப்படுகிறது. தமிழீழக் கோரிக்கை முன் வைக்கப்படுவதோட தமிழ் தேசியவாதத்தின் வளர்ச்சி முன் தள்ளப்படுகிறது. அதில இளைஞர்கள் எந்தப் பாதையை எடுக்கிறது என்ற விவாதங்கள் நடந்து கொண்டிருக்கு. அப்படியொரு காலகட்டத்திலதான் சில சம்பவங்கள் நடக்குது. துரையப்பாவை சுட்டது சரியா? பிழையா? துரோகி அழிக்கப்பட வேண்டும் என்ற நிலையை தமிழர்கள் மத்தியில் கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணத் தொகுதியை தங்கள் கையில் வைத்திருக்க வேண்டும் என்றதில தமிழ் தேசியத் தலைமைகள் தீவிரமாக இருந்தவர்கள். துரையப்பா இருக்கும் வரை அதை அவர்களால் கைப்பற்ற முடியாது என்ற ஒரு நிலை இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களிட்ட அவருக்கு செல்வாக்கு இருந்தது. கூட்டணிதான் கை காட்டும் இவர் துரோகி. அந்த வகையில துரையப்பா மட்டுமல்ல தியாகராஜா எனப் பலர்.

தேசம்: தமிழ் இளைஞர்களும் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதப் போராட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டு போராட முற்படுகின்றனர் என்கிறீர்களா?

நிச்சயமாக. அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. 1972ற்கு பிற்பாடு தான் தமிழ் இளைஞர்களின் வரவு, தமிழ் தேசியத்தை முன்னெடுக்கிறது. முன்னுக்கு வருகிறது. அப்ப என்ன நடக்கிறது என்றால், சிவகுமாரன் போன்ற தமிழ் இளைஞர் பேரவையில முன்னோடிகளா இருந்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்! இவ்வளவு காலமும் ஒரு அடிமை நிலையில் இருந்த மக்கள்! மிகக் குறுகிய காலத்திற்குள் ஆயுதம் ஏந்தி தங்களின் உரிமைகளை நிலை நாட்ட முடியுமாக இருந்தால், ஏன் தமிழ் இளைஞர்கள் தங்களுடைய உரிமைகளை, சிங்கள இனவாதிகளிடம் இருந்து ஆயுதம் ஏந்தி பெறமுடியாது என்ற விதமான ஒரு சிந்தனைப் போக்கு ஏற்படுகிறது.

தமிழ் இளைஞர் பேரவையில் இருந்த பலர் எங்களுடன் தொடர்பு உள்ளவர்களாகவே இருந்தனர். தமிழ் தேசியத்தை பேசினாலும் கூட சாதியப் போராட்டத்தை மனமார வரவேற்றவர்கள். சிவகுமாரன் போன்ற, இளைஞர் பேரவையில் இருந்த சிலர் எல்லாரும் இல்லை, இதை ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் தலைமைகள் இதற்கு ஆதரவு கொடுக்கவில்லை என்ற ஆதங்கம் அவர்களுக்கு இருந்தது.

அதனால் தான் அமிர்தலிங்கத்திடம் இவர்கள் திரும்பத் திரும்ப கேள்வி எழுப்பினார்கள். ஒரு கூட்டத்தில அமிர்தலிங்கம் பகிரங்கமாகச் சொன்னவர், 'இதுக்க பீக்கிங் சார்புடைய இளைஞர்கள் ஊடுருவி விட்டார்கள் போல இருக்கு' என்று. 'அவங்கட கருத்தை விழுங்கிப்போட்டு இங்க வந்து போராட்டம் போராட்டம் என்று கத்த வேண்டாம். எங்களுக்குத் தெரியும் எப்படி போராட வேண்டும்' என்று சொல்ற அளவுக்கு இளைஞர்கள் அழுத்தம் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்தப் போராட்டத்தினுடைய வலுவும், போராட்டத்தின் வெற்றியுடைய தாக்கமும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் தமிழ் இளைஞர்கள் இதேவழியில் போய் இடதுசாரி சக்தியாக வளர்ந்து விடுவார்கள் என்று தூர நோக்கோடு கணிப்பிட்டது கூட்டணி தான். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னணியே அதுதான். இனிமேல் சமஸ்டி என்றோ, பாராளுமன்றப் பாதை என்றோ, தமிழ் இளைஞர்களை வைத்திருக்க முடியாது. இந்த இடதுசாரிப் பக்கத்திற்குப் போய் வலுவான சக்தியாக வந்துவிட்டால் அது பெரிய ஆபத்து என்றதை உணர்ந்து தான், அவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கொண்டு வந்தார்கள். அதை அவர்கள் கொண்டுவந்தது உண்மையாக மனமுவந்து (தமிழீழத்தை) வென்றெடுப்பதற்காக அல்ல. இளைஞர்களை இடதுசாரிப் பக்கம் போகாமல் திசை திருப்புவதற்காகவே அந்தக் கோரிக்கையை கொண்டு வந்தார்கள்.

தமிழீழக் கோரிக்கை வைச்ச உடனேயே நாங்கள் அதை கடுமையாக எதிர்தனாங்கள். வட்டுக்கோட்டை மாநாடு இடம்பெற்ற இடத்தைச் சுத்தி சுவர்கள்ள சுலோகங்கள் எழுதினனாங்கள். 'தமிழ் முதலாளி தமிழீழம் கேட்கிறான்' என்று தமிழீழத்திற்கு விரோதமான கோசங்கள் தான் எழுப்பினது. அதன் அடிப்படையில தான் 1976ல் ஈழவேந்தனுக்கும் எனக்கும் இடையில ஒரு விவாதம். ஆணைக்கோட்டை பாரதி சனசமூக நிலையத்தில. யாழ்ப்பாணத்தில பெயர்பெற்ற விவாதம். தமிழீழம் சாத்தியமா? சாத்தியமில்லையா? சாத்தியம் என்று ஈழவேந்தனும் சாத்தியமில்லை என்று நானும். கருத்தியல் ரீதியில் இரண்டு கருத்தும் மிகக் கடுமையாக மோதுப்பட்டது. இதற்கு முன்னரும் ஒரு விவாதம். அதில சண்முகதாசனும் தர்மலிங்கமும் 1975ல் என நினைக்கிறேன் சுண்ணாகம் சந்தை மைதானத்தில் நடந்தது. இப்படியான கருத்தரங்குகள் பல இடங்களில் நடந்தது.

தேசம்: சாத்தியமற்றது என்றதற்கு என்ன காரணங்களை அப்போது நீங்கள் முன் வைத்தீர்கள் ?

அந்த நேரத்தில் சுயநிர்ணய உரிமை என்ற வார்த்தைப் பிரயோகங்கள் வரேல்லை. தமிழ் மகக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். பிரதேச சுயாட்சி அடிப்படையில தமிழ் மக்களுடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

ஈழம் என்றது சாத்தியமில்லாதது என்றதற்கு நாங்கள் வைச்ச காரணம். இந்தப் பிரிவினையைச் சாத்தியமாக்கக் கூடியது ஒரு ஏகாதிபத்தியத்தினாலயே சாத்தியம். அது சாத்தியமாக்கப்பட்டால் அது அவர்களுடைய நலனுக்காகவே இருக்குமேயொழிய தமிழ் மக்களுடைய நலனுக்காக இருக்காது. ஆகவே இலங்கை என்ற நாடு முற்று முழுதாக அந்நிய ஆதிக்கத்திற்கு உட்படும். அந்நிய சக்திகளால் முழு மக்களுமே ஆக்கிரமிக்கப்படக் கூடிய நிலையைத் தான் அது ஏற்படுத்தும். ஆகவே அந்நிய சக்திகளுக்கு இடம்கொடுக்கக் கூடிய பிரிவினைக் கோரிக்கையை சாத்தியமாக்க முடியாது.

தமிழ் மக்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய பிரதேசம், அவர்களுடைய வாழ்க்கை இவையெல்லாம் சுயமாகப் போராடி தமிழீழத்தை பெறக்கூடிய சூழ்நிலை என்றைக்குமே இருக்கவில்லை. இதையெல்லாமீறி தாண்டி வருவதாக இருந்தால் அமெரிக்காவோ, இந்தியாவோ அல்லது இன்னுமொரு அந்நிய சக்தியின் மூலம்தான் சாத்தியம். ஆனால் இதே கோரிக்கையை அந்நிய சக்திகள் பயன்படுத்தும்.

அடுத்து சொன்னது என்னவென்றால் இந்த தமிழீழம் எந்த கொள்கையின் அடிப்படையில் முன் வைக்கப்படுகிறது.

சாதிய சமூகமாக இருக்க கூடிய, வர்க்க சமூகமாக பிளவுபட்டு இருக்கிற தமிழ் சமூகத்தில என்ன விதமான வேலைத்திட்டம் இருக்கு என்ற கேள்வியையும் நாங்கள் எழுப்பி இருந்தம்.

தேசம்: இலங்கையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை ஒன்று இருந்தது. உள்ளது. அப்படியானால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை கொம்யூனிஸ்ட் கட்சி எப்படி அணுகியது?

அது கொம்யூனிஸ்ட் கட்சி விட்ட பாரிய தவறுதான். என்னவென்றால் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமா? இல்லையா? என்பதிலேயே விவாதம் வந்துவிட்டது. சண் ஆரம்பத்திலேயே ஒரு தவறுவிட்டு விட்டார். அதனால் தான் எங்களுக்கும் அவருக்கும் இடையில் ஒரு இடைக்கால முரண்பாடு வரவேண்டி வந்தது. அவர் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் இல்லை என்று சொன்னார்.

அவர் என்ன வரையறையிலை அதை வைத்தார் என்றால்; ஸ்ராலின்,

ஒரு தேசிய இனத்திற்கு கொடுத்த வரையறையை அப்படியே முன்வைத்தார். தேசம், மொழி, பொருளாதாரம், பண்பாடு இந்த நான்கும்; இந்த நான்கிலும் அவர் சொல்லிவிட்டார் பொருளாதாரம் இல்லையென்று. ஸ்ராலின் வரையறையில் தெளிவாகச் சொன்னது என்னவென்றால் இதில் ஒன்று குறைந்தாலும் அது தேசிய இனமாகக் கருத முடியாது என்று. எத்தனையோ வருடத்துக்கு முன்னம் சொன்ன விசயத்தை அப்படியே கொண்டு வந்திட்டார்.

நாங்கள் சொன்னம் ஸ்ராலின் சொன்னது பிழையல்ல. ஆனால் இன்றைய காலகட்டத்தில் தேசிய இனங்களாக வரையறுக்கக் கூடிய சூழல்களை நாங்கள் கவனத்தில் எடுக்கவேணும். தமிழர்களுக்கு பொருளாதாரம் இல்லையென்றால் இலங்கையில யாருக்குமே பொருளாதாரம் இல்லை. எல்லாம் அந்நிய பொருளாதாரத்திற்குக் கீழே தான் இருக்கு. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படவில்லை. சிங்கள மக்களுடைய பொருளாதாரம் என்ன? அதே நேரம் வடக்கில் விவசாயத் திட்டங்கள் எல்லாம் வளர்ச்சியடைந்து வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, மீன்பிடி உற்பத்திகள் எல்லாம் வந்து பொருளாதாரம் வளருது. அது என்றைக்கும் மணிஓடர் பொருளாதாரம் அல்ல. சந்தை வேறுபட்டு இருக்கலாம். உற்பத்தி குறைவாய் இருக்கலாம்.

இன்றைக்கு நாங்கள் சுயநிர்ணய உரிமை பற்றியும் சுயாட்சி பற்றியும் எடுக்கக் கூடிய தீர்மானம் அன்றைக்கு ஒரு தவறு நடந்தது ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். 1972க்குப் பிற்பாடுள்ள நிலைமையில தமிழர்களுடைய தேசிய இனப் பிரச்சினை பற்றி ஒரு தெளிவான முடிவை எடுக்கவில்லை.

தேசம்: சண் தேசிய இனப்பிரச்சினை பற்றி கறாரான ஸ்ராலினிசப் பார்வையைக் கொண்டிருந்தாக கூறியிருந்தீர்கள் பிற்காலத்தில் அவர் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாரா?

பிற்காலத்தில் அதை அவர் மாற்றிக்கொண்டார். நாங்கள் அதை வரையறுத்தனாங்கள். நான்கு தேசிய இனங்கள் என்று. சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையில 1978க்குப் பிறகு அவரில இருந்து விலகித்தான் வேலை செய்தோம். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லீம்களும் மலையக மக்களும் சுயநிர்ணய அடிப்படையில் ஒற்றையாட்சி என்ற, இந்த வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசசுயாட்சி அமைப்பிற்குள் முஸ்லீம்களது சுயாட்சி உள்ளமைப்பு ஒன்று உருவாக வேண்டும். அதே போல மலையகத்திலும் அந்த சுயாட்சி உள்ளமைப்பை அந்த புவியியல் சனச் செறிவின் அடிப்படையில வழங்க வேண்டும் என்று.

ஸ்ராலினுடைய வரையறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நாங்கள் சொல்லவில்லை. அது சரி. ஆனால் அது சோவியத் யூனியன் உருவாகிறதற்கு முன்னுக்கு வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை. இன்றைய

காலச் சூழலில் காலனித்தவத்தில் இருந்து விடுபட்ட மூன்றாம் உலக நாடுக ளில் தேசிய இனங்கள் வளர்ச்சி பெற்றிருக்கிறது. பெரும் தேசியவாதம் எந்த அளவிற்கு வளர்ந்ததோ, பெரும் தேசிய இனம் எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றதோ, அதே அளவிற்கு சிறு தேசிய இனங்களும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஸ்ராலினுடைய வரையறையை வைத்துக் கொண்டு அந்த தேசிய இனங்களின் வளர்ச்சியை புறம்தள்ள முடியாது. இதை மூன்றாம் உலக நாடுகளுடைய விசேச நிலைமைகளில் வைத்துத் தான் சுயநிர்ணய உரிமை யையும் ஸ்ராலின் சொன்ன வரையறையையும் பார்க்க வேண்டும் என்றது தான் எங்கட நிலைப்பாடு. ஸ்ராலினுடைய வரையறையை நிராகரிப்பது அல்ல. மார்க்ஸிச லெனினிசம் என்றது வளர்ச்சி பெற்ற ஒன்றாய்த்தானே வருகிறது. இந்த வளர்ச்சியை கவனத்தில் எடுத்துத்தான் நாங்கள் எங்கட நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை கோட்பாட்டிற்கு எப்படி பயன்படுத்துவது என்று பார்க்க வேண்டும்.

தேசம்: அன்று கொம்யூனிஸ்ட் கட்சி சரியான ஒரு தலைமையை கொடுத்திருந்தால் இன்றைக்கு உள்ள ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டு இருக்காது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

அப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் தமிழர்களுடைய தேசியவாதத் தலைமை என்பது எப்போதும் பழமைவாதத்தின் மீதும், ஆதிக்க சக்திகளின் மீதும் தான் கட்டி எழுப்பப்பட்டது. பாராளுமன்ற ரீதியில் சேர் பொன் ராமநாதன் தொட்டு அதற்கு முன் முத்துக்குமாராசாமி காலம் தொட்டே தமிழர்கள் மத்தியில் உள்ள ஆளும் ஆதிக்கசக்திகளால் தான் அவர்களுடைய அரசியல் தீர்மானிக்கப்பட்டது வரலாறு.

ஆகவே இதை உடைத்து ஒரு இடதுசாரிப் பக்கத்திற்கு கொண்டு செல்வது என்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. அதை நாங்கள் சாதியப் போராட்ட நேரத்தில பார்த்தம். அதை ஒரு போராட்டமாக ஏற்றுக் கொள்ளாத தலைமைதான் தமிழரசுக் கட்சியினுடைய தலைமையாகவும் கூட்டணியினுடைய தலைமையாகவும் இருந்தது.

இரண்டாவது பிரச்சினை இந்த தமிழீழக் கோரிக்கை வைக்கப்பட்ட போது அதற்கான கொள்கை என்ன? கோட்பாடு என்ன? நடைமுறை என்ன? என்று யாரும் கவனத்தில் கொள்ளாமல் அதற்குப் பின்னால் ஒரு பஜனை கோஸ்டி மாதிரிச் சென்றது தான். தமிழீழம்! தமிழீழம்!! அதைத் தொடர்ந்த ஆயுதம் தூக்கிய இளைஞர் இயக்கங்களும் அதை தமிழ் தேசியவாத போக்கில தான்; அதனுடைய பிரதானமான கருத்தோட்டத்தோடு அண்டித்தான் போகக் கூடிய தாய் இருந்தது. கொம்யூனிஸ்ட் கட்சி சரியான கொள்கை வைத்திருந்தால், போராட்டம் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வந்திருக்கும் என்றது யதார்த்தத்திற்குப் புறம்பான விசயம்.

இது ஏற்கனவே ஒரு சாதிய சமூகம்தான். ஏற்கனவே நீங்கள் சொன்னது போல கருத்தியல் ரீதியில் உடைபடாத சமூகம்தான். தேநீர்க் கடையில சமத்துவமாக தேநீர் கொடுத்தார்களே தவிர, சமூக ஆதிக்கத்தை கையிழக்கத் தயாரில்லாத சமூகமாகத் தான் தமிழர் சமூகம் இருந்து வந்தது. எனவே அந்த ஆதிக்கத்திற்கு அளவான ஒரு தலைமையைத் தான், தமிழ் மக்கள் தேடினார்களே ஒழிய, அதற்கு அப்பால் செல்ல அவர்கள் தயாரில்லை.

அடுத்தது ஏகாதிபத்தியத்தை எதிர்க்காத சமூகமாகத்தான் தமிழர் சமூகம் இருந்து வந்தது. எப்போதும் காலணி ஆதிக்கத்திற்கு ஆதராவக இருந்து வந்த சமூகமாகத்தான் இருக்கிறது. அவை பெற்ற கல்வியும், அவை பெற்ற உத்தியோகங்களும், அவர்களுடைய வருமானங்களும், கொழும்புச் சீவியங்களும் கூட ஆதிக்கப் போக்கோடு இணைந்து போறதாகத்தான் இருந்தது. அதற்கு எதிராக எதிர்நீச்சல் போட்டுச் செல்வதை அவர்கள் நாடியதில்லை என்ற யதார்த்தம் தான் அங்கு இருந்தது.

யதார்த்தத்திற்கு மேல் நாங்கள் கொள்கை வைக்காதது ஒரு குறை பாடாக இருந்தாலும், அப்படி ஒரு கொள்கை வைக்கப்பட்டு இருந்தாலும் அந்த மக்கள் கொம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைமையை ஏற்றுக் கொண்டிருபடபார்களா என்பது ஒரு பிரச்சினை. ஏனென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் கொம்யூனிஸ்ட் கட்சியை ஏற்றுக்கொண்டதற்கான காரணம் அவர்களுடைய வர்க்க நிலை. அவர்கள் ஆதிக்க சக்தியாக இருக்கவில்லை. ஆளப்பட்ட சக்தியாகத்தான் இருந்தார்கள். அவர்களுக்கு எங்கள் தலை மையை ஏற்றுக் கொள்வது இலகுவானதாக இருந்தது. போராட்டத்தில முன்நிற்கிறதற்கும் அந்த மக்களால் முடிந்தது.

அதனால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய போராட்டத்தை நடத்திய ஒரு கட்சி வர்க்கரீதியில் போராட வேணும் என்று சொல்கின்ற ஒரு கட்சி ஆதிக்க நிலைப்பாட்டை மீறி இந்தத் தலைமையை ஏற்றிருக்கும் என்பது முடியாது. அப்படி வந்திருக்கும் என்று ஒரு கற்பனைக்கு வைத்திருந்தாலும் கூட ஒரு இடதுசாரி கருத்தியல் பேசிய கட்சிகளால் ஏன் பெரிய அளவிற்கு வளர முடியவில்லை என்ற ஒரு கேள்வி வரத்தானே செய்யும். இது ஏகாதிபத்தியத்தோடும் இந்திய மேலாதிக்கத்தோடும் இணைந்து செல்கின்ற போக்குக் கொண்டது.

இந்த இடதுசாரி சக்திகள் வளராமல் தடுப்பதற்கு என்று எழுபதுக்களில பங்களாதேஸ் பிரிக்கப்பட்டது. பங்களாதேசுக்கு இந்தியப்படை போவதற்கு பிரதான காரணம் என்னவாய் இருந்தது. அங்கு ஒரு இடதுசாரி கொம்யூனிஸ்ட் கட்சி வலுவாக அதிகாரத்திற்கு வருவதற்கான வாய்ப்பு இருந்ததால் தான். அதை உடைப்பது தான் அவர்களுடைய தேவையாய் இருந்தது.

அந்தக் கண்ணோட்டத்துடன் நாங்கள் திரும்பி வடக்கைப் பார்த்தால், வடக்கில் பெரிய எழுச்சி இருந்தது உண்மை. அதைத் தடுக்கிறது தான் தமிழ்

ழக் கோரிக்கையாகவும் இருந்தது. இந்திய ஆதரவு தமிழர் தலைமையுடைய நோக்கமாகவும் இருந்தது. ஒன்றோடு ஒன்று இணைத்துப் பார்க்காமல். ஏன் தலைமை தாங்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டாக யதார்த்தை மீறிப் பார்க்க முடியாது.

நாங்கள் வர்க்கப் போராட்ட அடிப்படையில் தான் நிற்கிறோம். தலைமை தாங்க வேண்டும் என்பதற்காக அதிதீவிர தேசியவாத கோரிக்கையைக் கொண்டு சிங்கள ஏகாதிபத்தியம், சிங்கள இனவாதிகள் என்று நாங்கள் போகேலாது.

தேசம்: இது ஒரு சாதிய சமூகம். சாதியப் போராட்டத்திற்கு தலைமை வகித்த கட்சி என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதேசமயம், கூட்டணி பாராளுமன்றப் பாதையால் தமிழீழக் கோரிக்கையை முன் வைத்தது. இளைஞர்களைத் தூண்டியது. ஆனால் சாதியப் போராட்டத்தில் எடுத்த அதே நிலைப்பாட்டை போராட்ட நிலைப்பாட்டை கொம்யூனிஸ்ட் கட்சி தமிழர்களுடைய தேசிய இனப்பிரச்சினையில் எடுத்திருந்தால் நிலைமை இவ்வாறு போயிருக்காது அல்லது ஒரு மாற்றத்திற்கான வாய்ப்பு ஏற்பட்டு இருக்காது என நினைக்கிறீர்களா?

நீங்கள் கேட்பது போல் நாங்கள் ஒரு கொள்கையை முன்வைத்து ஆயுதம் தாங்கிய ஒரு பிரிவை ஏற்படுத்தி போராடி இருந்தாலும் கூட, சர்வதேச சக்திகளும் அதன் கையாட்களாக இருக்கக் கூடிய சக்திகளும் எப்படி எங்களைப் பார்ப்பார்கள் என்பது ஒரு கேள்வியே. வர்க்க ரீதியாக சிந்திக்கிறதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாடும் அவர்களால் ஏற்க முடியாத ஒன்று.

ஆனால் நீங்கள் சொல்வது போல அந்தப் போராட்டத்திற் கூடாக வந்த சக்திகளை நாங்கள் வைத்திருந்து இருக்காலம். அந்தப் போராட்டத்திற்கூடாக வந்த சக்திகள் தான் பல்வேறு இயக்கங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். இளைஞர்கள், பெற்றார்கள், அந்தக் குடும்பங்களில் இருந்து வந்தவர்களே இயக்கங்களுக்கு சென்றிருக்கிறார்கள். எங்களால் அதனை தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை என்றதை நாங்கள் சுயவிமர்சனமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தேசம்: இந்த இயக்கங்களுக்கு வருபவர்கள் எந்த முகாமில் இருந்து வருகிறார்கள் என்பது முக்கியமானது. இடதுசாரி முகாமில் இருந்து வருகிறார்களா? அல்லது கூட்டணி முகாமில் இருந்து வருகிறார்களா? என்பதைப் பொறுத்தே அவர்களுடைய சிந்தனைப் போக்கு அமைந்திருக்கும் அல்லவா?

நிச்சயமாக. அவ்வாறு இயக்கங்களை நாடிச் சென்றவர்கள் பின்னர்

விரக்தியடைந்து அதைவிட்டு வெளியேறினார்கள். ஏனென்றால் அவர்கள் இருந்த தளம் வேறு. சென்ற இடதத்தில் அது இருக்கவில்லை. விரக்தியில் விட்டுட்டு வந்து அமைதியாகப் போன ஆட்கள் இருக்கிறார்கள்.

தேசம்: இடதுசாரி இயக்கங்களில் தமிழ் இளைஞர் பேரவையோடு சம்பந்தப்பட்ட இளைஞர்கள் இருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். உங்களது கட்சிக்கும் அவர்களுக்குமான உறவு எப்படி இருந்தது?

சிவகுமாரனுக்கு சில தொடர்புகள் இருந்தது. சந்ததியாரும் முற்போக்காகச் செயற்பட்டவர். சத்தியசீலனுக்கு பெரிய உறவு இருக்கவில்லை. தமிழ் இளைஞர் பேரவையில இருந்த முற்போக்கு சக்திகள் என்று பார்த்த ஒரு பார்வை இருந்தது. சுழிபுரம் அந்தப் பகுதிகளிலுள்ள இளைஞர்கள் சுப்பிரமணியம் அவர்களோட தொடர்புகளை வைத்திருந்தார்கள். அவைக்கு சில அரசியல் வகுப்புகளையும் நான் நடத்தி இருக்கிறன்.

இது என்னத்தில முறிவடைந்த என்று சொன்னால், தரப்படுத்தலுக்கு எதிராக ஒரு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த ஊர்வலம் ஒரு மிக மோசமான ஊர்வலமாக மாறிவிட்டது. எங்களுடைய மாணவர் அமைப்பும் சேர்ந்து தான் அந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்தது. எங்களுக்கு ஒரு மாணவரமைப்பு இருந்தது. அப்போது தீ என்று ஒரு மாணவர் பத்திரிகையும் நடத்தினோம். அந்த ஊர்வலத்தை பொலிஸ் மறித்தது. கூட்டணிக் காறர்கள் வந்து சொன்னார்கள் ‘ஏன் பொலிசோடு முரண்பாடு கைவிடுவோம்’ என்று. எங்கட ஆட்களும் இளைஞர் பேரவையில் உள்ள தீவிரமானவர்களும் ‘இல்லை நடத்தத்தான் வேணும்’ என்று நின்றம். பொலிஸ் ஊர்வலத்தை நடத்தச் சொல்லிப் போட்டுது.

ஊர்வலம் வந்தா எங்கட மாணவர்கள் எல்லாரும் இருந்தவர்கள். முஸ்லிம் மாணவர்களும் வந்தவர்கள். முஸ்லீம் ஐந்து சந்தியால அந்த ஊர்வலம் வரேக்க, இதுதான் அந்த கருத்தியல் ரீதியான பிரச்சினை என்றது. அதில வந்தோன்ன என்ன சொன்னாங்கள், முக்கால்! முக்கால்!! பதியுதீன் முக்கால்!!! தாங்கள் போட்டிருந்த தொப்பிகளைக் கழற்றிசுழற்றி தொப்பி பிரட்டிகள் என்று சொல்வதை பாவனை பண்ணி அது பெரிய பிரச்சினையாகியது. நாங்கள் முரண்பட்டு சண்டை பிடித்தோம். நாங்கள் ஏற்கனவே தரப்படுத்தல் பற்றி நோட்டிசும் அடித்திருந்தோம். ஒட்டுமொத்தமா தமிழர்களுக்கு எதிரானது என்றாலும் அதில பின்தங்கிய பிரதேசங்களுக்கு சலுகைகள் வழங்கியது நல்ல அம்சம் என்றதையும் சொல்லி இருந்தோம். இதில முரண்பாடு வந்ததும் அடிபாடும் வந்துவிட்டது.

அதிலயே எங்களுக்கு என்ன வெளிப்பட்டது என்றால் தேசியவாதக் கருத்தோடு இணைந்து போறது என்றது முடியாது. ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தில செயற்படுறது என்றதில்லை. அவங்கள் ‘நாங்கள் சொல்றதற்குப் பின்னால வாங்கோ.’ இன்றைக்கு இருக்கிற நிலமை தான்.

அதுக்கு பின்னுக்கு நீங்கள் கேள்வி நியாயம் இல்லாமல் வர வேணும். அன்றைக்கு துவக்கு இருக்கேல்ல. ஆனா அந்த ஆதிக்க கருத்தியல் இருக்கத்தான் செய்யுது.

ஜே ஆரின்ற கூட்டத்தை குழப்பிறதில நாங்கள் போனது எங்கட நிலைப்பாட்டில இருந்து ஜே ஆர் ரை கேள்வி கேட்டு குழப்பிறதற்கு. இவர்கள் நின்றது எங்களுக்குத் தெரியாது. ஜே ஆர் பேசுறதற்கு ஆய்த்தம். நாங்கள் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறம். எங்களை அடையாளப்படுத்திக் குழப்ப வேண்டும் என்றில்லைத் தானே. எங்க குழப்பலாம் என்று சொன்னா, ஜே ஆர் ஒரு இடத்தை சொன்னார் ‘தெல்லிப்பளையில இருந்து காங்கேசந்துறை வரை செல்வநாயகத்தோட ஊர்வலத்தில போன்னான் ஒரு இடத்திலையாவது செல்வநாயகம் தமிழீழத்தைப் பற்றி என்னோட பேசேல்ல’ எனறு எங்கட இளைஞர்கள் இதுதான் சந்தர்ப்பம் என்று பார்த்து ‘நிறுத்து’ என்றது தான் தாமதம் தொடங்கிற்று. செருப்பால அதால இதால என்று மோசமான எறி. அதோட கூட்டம் குழம்பீட்டுது. மற்றவர்கள் இன்னொரு பக்கத்தால குழப்பினது. குழப்பினது ஒரு விடயம் ஆனா குழப்பினதின்ர நோக்கம் வேற வேற. அதிலையே கோசங்கள் பிறிம்பு பிறிம்பா தெரிந்தது. அவை இனவாதக் கோசம். நாங்கள் ‘ஏகாதிபத்திய அமெரிக்க பாதம் தாங்கி’ என்று இங்கால ஒரு கோசம். கருத்தியல் ரீதியல் அவர்களோட பிரச்சினைதான்.

தேசம்: சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாததால் சாதிய அமைப்பை தகர்க்க முடியவில்லை சமூகத்தில் இன்றும் நிலைத்து இருக்கிறது என்று கருதலாமா?

தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படாதது என்று சொல்வதிலும் பார்க்க தமிழ் தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்த இளைஞர் களுக்கு, சாதியம் பற்றி தெளிவான பார்வையை கருத்தியல் ரீதியில் முன்வைக்க முடியாத நிலை இருந்தது. காரணம் என்னவென்றால் அதை முன்வைத்தால் இயக்கத்திற்கு ஆள் சேர்க்க முடியாது. அதுதான் அங்கு முக்கியமானது. ஆகவே அவர்கள் அந்தப் பக்கத்தையும் சமாளிச்சு இந்தப் பக்கத்தையும் சமாளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மத்தியில் போராட்டத்தின் தொடர்ச்சி என நினைத்துக் கொண்டு சோசலிச தமிழீழம்! சமத்தவமான தமிழீழம்!! வரும் என்ற மாயத் தோற்த்திற்குப் பின்னால் தள்ளப்பட்டனர்.

தேசம்: இன்றைய காலகட்டத்தில் இனப்பிரச்சினை மிகவும் தீவிரமாக உள்ள சூழ்நிலையில் சாதியப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமா?

பிரச்சினைகள் இருக்கிறது. ஆனால் தேசிய இன ஒடுக்குமுறை என்பது இனவாத அரசாங்கத்தின் கீழ் உக்கிரமமாக முன்னெடுக்கப்படுகிறது. பேரின வாத ஒடுக்குமுறை என்றது எந்த சந்தர்ப்பத்திலும் தன்னை கீழிறக்கவோ

தயாரில்லாத நிலையில் தான் இருக்கிறது. அது தமிழ் தேசிய இனத்துக்கு மாத்திரமல்ல முஸ்லீம், மலையகச் தேசிய இனங்களுக்கும் எதிரான பேரின வாத ஒடுக்குமுறையாகத் தான் அது இருக்கிறது. இந்த நேரத்தில மார்க்சிச கண்ணோட்டத்தில மாசேதுங் சிந்தனை அடிப்படையில நாங்கள் பார்க்கிறது என்னவென்றால் ஒரே நேரத்தில பல முரண்பாடுகள் இருக்கும். இதில் ஒரு முரண்பாடு தான் பிரதான இடத்தை வகிக்கும். ஒரே நேரத்தில இரண்டு முரண்பாடுகள் பிரதான இடத்தை வகிக்க முடியாது. அந்தப் பிர தான முரண்பாட்டை அடையாளம் காண்கிறது போராட்ட கொள்கை வகுப்பாளர்களுக்கு மிக அடிப்படையான விசயம்.

தேசிய இன ஒடுக்குமுறை என்றதும் பேரினவாத ஒடுக்குமுறை என்றதும் தான் இன்றைக்கு பிரதான முரண்பாடாக இருக்கிறது. இது இன்றைக்கு யுத்த சூழலை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் தேசிய இனம் என்றரீதியில் எல்லா சாதி மக்களும் தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த முரண்பாட்டுக்கான போராட்டங்களை தமிழ் மக்களுடைய சிந்தனையை மழுங்கடிக்கக் கூடிய விதமாக அல்லது திசை திருப்பக் கூடியவிதமாக அதனுடைய தீவிரத்தை குறைத்துக் காட்டும் விதமாக ஏனைய முரண்பாட்டை முன்னெடுக்கக் கூடாது.

இலங்கையில் இன்றைய காலகட்டத்தில் எமது கட்சி நான்கு விதமான முரண்பாடுகளை அடையாளம் காண்கிறது. ஒன்று வர்க்க முரண்பாடு. வெளிப்படையான அடிப்படையான முரண்பாடாக நாங்கள் காண்கிறோம். நீண்டகால சமூகப் புரட்சியின் மூலமாக மக்கள் யுத்தப் பாதையினூடாக தீர்க்கப்பட வேண்டும். இரண்டாவது இன முரண்பாடு. இன முரண்பாடும் நீண்டகாலத்தில் வளர்ச்சி பெற்று யுத்தமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. நட்பு நிலையில் இருந்து பகை நிலைக்கு மாற்றப்பட்ட முரண்பாடு. இது நிரந்தரமானது அல்ல. இத்தேசிய இனமுரண்பாடுக்கு சரியான தீர்வொன்று வரும்மிடத்து நட்பு நிலைக்கு கொண்டுவரக் கூடியது. தமிழ் தேசியவாதத்தின் பிற்போக்கு சக்திகள் அதனை பகை நிலையில் வைத்திருக்கவே விரும்புகிறார்கள். மூன்றாவது முரண்பாடு சாதிய முரண்பாடு. ஏற்கனவே சொன்னது போல நடைமுறை ரீதியில், கருத்தியில் ரீதியில், தனிப்பட்டரீதியில், மறைமகமான நிறுவன வடிவிலே இருக்கிறது. எல்லா இடத்திலும் அது விரவி நிற்கிறது. இறுதியானது பெண்கள் மீதான ஒடுக்குமுறை. இது நட்பு ரீதியான நிலையில் தான் காணப்படுகிறது. ஆனால் அது தீவிரம் அடைந்து தான் வருகிறது. இந்த நான்கு முரண்பாடுகளும் இலங்கை சமூகத்தில நீடித்து நிலைத்து நிற்கிறது.

இதில வர்க்க முரண்பாடு அடிப்படையானதாக இருக்க; இனமுரண்பாடு இரண்டு பக்கத்தாலும்; பெரும் தேசியவாதத்தாலும், குறும்தேசியவாதத்தாலும் ஒன்றுக்கு ஒன்று திணி போட்டு வளர்க்கப்பட்டு அதனை பிரதான இடத்திற்கு கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். இந்தப் பிரதான இடத்தில இருக்கிறதை

இல்லையென்று சொல்வது யதார்த்தத்திற்கு மாறான விசயம். அது பிர தான இடத்தில் இருக்கத்தக்கதாக சாதிய முரண்பாட்டை துக்கிறது என்பதோ அதை பிரதான முரண்பாடாக முன்நிறுத்துவதோ பேரினவாத ஒடுக்குமுறைக்கு உதவி செய்வதாகத்தான் அமையும்.

தேசம்: இனமுரண்பாடு என்பது பிரதான முரண்பாடாக இருப்பதை ஏற்றுக்கொள்கிறேன். இதில் மாற்றுக் கருத்து இல்லை. என்னுடைய கேள்வி பிரதான முரண்பாட்டிற்கான தீர்வு காணப்படும் வரைக்கும் ஏனைய முரண்பாடுகளை எப்படிக் கையாள்வது?

அதனை அந்தந்த தளங்களில நாங்கள் கையாள வேணும். நாங்கள் சொல்ல வரவில்லை சாதிய ரீதியான முரண்பாடு ஒரு பாடசாலையிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ அல்லது அரசாங்க அலுவலகத்திலோ காணப்பட்டால் அதனை பெரிசு படுத்தாதேங்கோ. போராட்டத்துக்கு பாதகம் சும்மா விடுங்கோ என்று நாங்கள் சொல்ல வரவில்லை. அதனை அம்பலப்படுத்த வேண்டும். அதற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட வேண்டும். எந்த வடிவத்தில் என்றால், இந்த பிரதான முரண்பாட்டின் பிர தான ஒடுக்குமுறையை திசை திருப்பாத வகையில் தான் அதைக் கையாள வேணுமே தவிர அந்த முரண்பாட்டைக் காட்டி தமிழ் மக்களைப் பிரித்து இந்த போராட்டத்தை பலவீனப்படுத்தக் கூடாது.

தேசம்: புலம்பெயர் நாடுகளிலும் தற்போது தலிதியம் பேசப்படுகிறது. உங்களைப் போன்ற அரசியல் நிலைப்பாட்டை உடைய ஒரு-சாரார் இது தமிழ் மக்களைப் பிளவுபடுத்துவதாகக் கூறுகிறார்கள். பிரதான முரண்பாட்டை திசை திருப்புவதாகவும், பேரினவாத ஒடுக்குமுறையாளர்களுக்கு சார்பானதாகவும் அமைகிறது என்று குற்றம்சாட்டுகிறார்கள். இதே கருத்தை தமிழ் தேசியவாதத்தை முன்நிலைப்படுத்துபவர்களும் வைக்கிறார்கள். இது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகக் கூறுகிறார்கள். இரு தரப்பினரதும் நோக்கம் வேறு. ஆனால் சொல்லும் விசயம் ஒன்று:

தமிழ் தேசியவாதிகள் சொல்றது சாதிய முரண்பாடு அற்றுப் போய்விட்டது. அதுவும் யாரால என்றால் தங்கட தமிழ் தேசியப் போராட்டத்தால் தான் அற்றுப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். சாதிய முரண்பாடு அற்றுப் போய்விட்டது என்று நாங்கள் சொல்லவில்லை. அணுகுமுறையில் தான் வித்தியாசம். ஏன் அதை மறுக்கீனம் என்றால் இந்தப் போராட்டத்தால தங்கட இந்த நிலைப்பாட்டுக்கு பலவீனம் வந்துவிடும் என்றதால. நாங்கள் சொல்றம் என்ன என்றால், சாதியம் இருக்கிறது என்றதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் புலிகள் இயக்கத்திற்கு எழுதுகிற கட்டுரைகளிலும் அதைத்தான் எழுதுறம். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள உள் முரண்பாடுகளை அடை

யாளம் காண வேண்டும். அதைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களை நாங்கள் காண வேண்டும். அதற்கான கருத்தியலை முன்வைக்க வேண்டும்.

சாதிய முரண்பாட்டிற்கு, பெண் ஒடுக்குமுறைக்கு, கிழக்கில் ஏற்பட்டு இருக்கிற நிலைமை பிரதேசவாதம் நாங்கள் சொன்னது என்னவென்றால் ஏற்கனவே கவனிக்கப்பட்டு இருந்தால்; இவைக்கு இந்த அழிவுகரமான நிலை மை வந்திருக்காது. இவை ஆதிக்க போக்கிலே பார்த்தார்களே தவிர, கிழக்கு மக்களுடைய அபிலாசைகள் என்று பார்க்கவில்லை. இப்பவும் அவை கருணாவுக்கு பதிலாக இன்னுமொரு ஆளைத் தேடுகினமே ஒழிய, கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களுடைய அபிலாசைகள் என்ன என்றதை அடை யாளம் காண அவையாள முடியவில்லை. இதுதான் இந்தப் பிரச்சினை.

இதுபோலத் தான் சாதிய முரண்பாடும். இயக்கங்களுக்குள் கூட அந்த முரண்பாடு வந்திருக்கு. போராட்ட காலத்தில நடைபெற்ற திருமணங்கள் சமாதான காலத்தில டைவேர்ஸில போய் முடிஞ்சிருக்கு. போராட்ட காலத்தில சாதியை அடையாளம் காண முடியவில்லை. அனுபவரீதியாக எங்களுக்கு கிடைச்ச விசயங்கள் ஏராளமாய் இருக்கு.

போராட்ட நேரத்தில போராளிகளை ஒரு வீட்டுக்கப் பக்கத்தில வைச்சு பராமரிச்சவை. அதுக்கு பக்கத்தில உள்ள வீடுகளில உள்ள பொம்பிளப் பிள்ளையள் சாப்பாடுகளை கொண்டே குடுத்து ஆதரவாய் இருந்தவை. அவைகளுக்கு ஆதரவு என்றது அங்கவீனர்களாக இருக்கிறார்கள், பாவங்கள் என்ற அடிப்படையில. அதுல ஒரு பெடியனை சாப்பாடு குடுத்த பிள்ளை, அந்த நேரத்தில அந்தப் பெடியன் என்ன சாதி அந்தப் பிள்ளை என்ன சாதி என்று ஆருக்குமே தெரியாது கலியாணமும் முடிஞ்சுது. ஒரு பிள்ளையும் ஆச்சுது. சமாதானமும் வந்திது. சொந்த ஊரைச் சேர்ந்த சொந்தக்காரர் வீட்டை போயிருக்கினம். ‘காங்கேசன்துறையில எந்த இடம்?’ இந்தப் பிள்ளை எங்கட கட்சிப் பின்னணியில வளர்ந்த பிள்ளை. தகப்பன் ஒரு ஆசிரியர். தாய் ஒரு ஆசிரியை. காதல் திருமணம். ஒரு பிள்ளை. இன்றைக்கு அந்தப் பிள்ளை ஒரு குழந்தையோடு மலையகத்தில் ஒரு ஆசிரியையாக இருக்கிறா. இது ஒரு உதாரணம். இப்படிப் பல திருமணங்கள்.

தேசம்: தேசிய ஒடுக்குமுறை நிகழ்கிற காலகட்டத்தில சாதிய ஒடுக்குமுறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படியானால் அந்த சாதிய ஒடுக்குமுறைக்கான போராட்டத்தை எந்த அடிப்படையில் கொண்டு செல்வது?

ஒரு எல்லைக்கு உட்படுத்தப்பட்ட அளவில தான் கொண்டு செல்ல வேண்டும். போராட்டம் என்ற நிலையை விட அதனை அம்பலப்படுத்தி; கருத்தியல் ரீதியாக மக்கள் மத்தியில், பிரச்சார ரீதியாகத் தான் கொண்டு செல்ல வேண்டும். இது தமிழ் தேசிய இனத்தினுடைய ஐக்கியத்திற்கும்,

நிலைப்பிற்கும், கருத்தியல் ரீதியில் அதை (சாதியத்தை) உடைப்பதற்குமான வேலைகளைச் செய்யும். அதற்கு அப்பால் போராட்டமாக எடுப்பமாக இருந்தால், ஒட்டு மொத்தமாகவே தமிழ் தேசிய இனத்திற்கு பாதகமான விடயங்களைத் தோற்றுவிப்பதாகத்தான் முடியும். அதற்காக அப்படி ஒரு பிரச்சினை இல்லையென்றோ அதை வெளிக்கொணரக் கூடாதென்றோ அதை அம்பலப்படுத்தக் கூடாதென்றோ நாங்கள் கொள்ளவில்லை. எங்களது பத்திரிகைகளில் அவ்வப்போது நடக்கக் கூடிய சம்பவங்களை கண்டித்து எதிர்த்து எழுதி வருகிறோம்.

கிராமங்களில் கட்சி சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. பழைய எங்களது போரட்டங்கள் நடந்த கிராமங்களில் இப்பவும் எங்களது வேலைகள் நடக்கிறது. அது வந்து அந்தக் கிராமங்களுடைய பொருளாதார, கல்வி, சமூக விடயங்களை மேம்படுத்திற வேலைகள் நடக்கிறது. நிலம் இல்லாதவர்கள் அரசாங்க உதவிகள் மூலம் நிலங்களைப் பெறுவதற்கும், சொந்த முயற்சிகளின் மூலமாக ஒரு ஐக்கியப்பட்டு செயற்படுறது.

யாழ்ப்பாண சூழலில் சனசமூக நிலையங்கள் பின்தங்கிய கிராமங்களில முக்கியமாக உள்ளது. இந்த சனசமூக நிலையங்களை மையமாக வைத்துத்தான் நாங்கள் எங்கட வேலைத் திட்டங்களை மேற்கொள்கிறம். புத்தூரில் ஒரு கிராமம் இருக்கு. கீழ்த்தரமாக மற்றவர்களால புறக்கணிக்கப்பட்ட ஒரு கிராமம். மிகவும் ஒடுக்குமுறைக்கு உள்ளான ஒரு கிராமம். இன்றைக்கு 2008ல கூட ஏ எல் பாஸ் பண்ணி பல்கலைக்கழகம் போன ஒரு மாணவனை, அரசாங்க உத்தியோகம் செய்யிற ஒராள காண முடியாது. கல்வீடுகள் கட்டி இப்ப இப்பதான் அதைச் செய்கிறார்கள். புலம்பெயர்ந்தவர்களும் பெரிதாக இல்லை. ஒரு குடும்பம் இரண்டு குடும்பம் தான் இருக்கும்.

500 பேரைக் கொண்ட ஒரு கிராமம் 1930ம் ஆண்டில இருந்து முழு மக்களும் ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு கிராமம். கல்விக்கான அடிப்படை வசதிகள் கஸ்டங்களின் மத்தியில் தான். முரண்பாடில்லாத அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கிறது.

முழுக்க முழுக்க மக்களுக்குச் சொல்லக் கூடியது என்னவேன்றால், மற்றவர்களுடைய பொருளாதார உதவியை எதிர்பார்க்கிறதை விட நாங்கள் ஐக்கியப்பட்டு எங்களுடைய சொந்த உழைப்பின் மூலமாக வரும் பணத்தில் ஒரு பகுதியை ஒதக்கி இந்த பொது வேலைகளைச் செய்ய வேண்டும் என்றது தான்.

இன்றைக்கு தாங்களாகவே ஒரு பாடசாலையைக் கட்டி முதியோர் கல்வி நிலையத்தை நடத்துகிறார்கள். முதியோர் கல்வி என்றால், நீங்கள் நினைக்கக் கூடாது 60 வயது வந்தவர்களுக்கு என்று. 20 வயது 18 வயது பள்ளிக் கூடம் போகாதவர்களை எல்லாம் அங்கு முதயோர் கல்வித்

திட்டத்திற்குக் கீழ் கொண்டு வந்து எழுதவும் வாசிக்கவும் கற்பிக்கிறார்கள்.

பண்பாட்டு ரிதியிலும் வேலைகள் நடக்கிறது. கசிப்பு பாவிக்கிதிற்கோ, விற்பனை செய்யவோ, தயாரிக்கவோ கறாராக நின்று தடுக்கிறார்கள். மக்கள் மன்றம் ஒன்றை உருவாக்கி அதில தான் அந்த கிராமத்தில நடக்கிற பிரச்சினைகள் பற்றி விசாரணைகள். கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டு இருக்கு. சனங்கள் இயக்கங்களுக்கு போறதில்லை. மக்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். காரணம் என்னவென்றால் கட்சியில் இருக்கிறவர்கள் தான் அந்த சனசமூக நிலையத்தின் முக்கிய நிர்வாகிகள். உயர் சாதியினர் மத்தியல உள்ள சில முரண்பாடுகளைக் கூட கொண்டு வருகிறார்கள்.

வட மாகாணத்திலேயே முன்னுதாரனமான கிராமமாய் அது இருக்கிறது. அப்படி வெவ்வெறு கிராமங்களில் வெவ்வேறு வடிவங்களில திட்டங்கள் நடக்கிறது. கல்வி வளர்ச்சியை கூடுதலாக முக்கிய கவனத்தில கொண்டிருக்கிறம். தொழில் பாதுகாப்பு. நெல்லியடியில் உள்ள கன்பொல்லை கிராமத்தவர்கள் பருத்தித்துறை துறைமுகத்தில வகுப்புத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அதுக்கு ஒரு சங்கம் அமைத்து செயறபடுத்துகிறோம்.

ஆனால் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக கடந்தகாலத்தை போல அங்கு செய்ய முடியாது. நெருக்கடிகளின் மத்தியில் தான் இயங்க வேண்டியிருக்கு.

தேசம்: இன்றைக்கு தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்கமுறைக்கு எதிரான போராட்டம் ஆதிக்க சாதியினரின் கையிலேயே உள்ளது. இதற்கான தீர்வு முன் வைக்கப்படும் போது அது சாதி அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்த தீர்வையும் பெற்றுத் தரப்போவதில்லை. அது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். இடைக்காலத் தீர்வுக்கு ஆலோசணை முன் வைக்கப்பட்ட போது நாங்கள் அதனை சுட்டிக்காட்டி இருந்தோம். வடக்கு கிழக்கிற்கான தீர்வு முன்வைக்கப்படும் போது தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலம், கல்வி, பொரு ளாதாரம் போன்ற அவர்களுடைய பின்தங்கிய நிலைமைகளை மாற்றி அமைக்கக் கூடிய விடயங்கள் அதில இடம்பெற வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி இருக்கறோம்.

ஆனால் அது வேறு பிரச்சினை இது வேறு பிரச்சினை என்று தீர்வை வைக்க வருவது பிரச்சினையானது. தனியாக தாழத்தப்பட மக்களுடைய பிரச்சினைக்குத் தான் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம் என்று சொல்ல வருவது தான் பிரச்சினை. ஆதிக்க சக்திகள் தான் தேசிய இனப்பிரச்சினையை கையில வைச்சிருக்கிறார்கள் என்றது சரி. ஆனால் தமிழ் மக்களுடைய

அபி லாசைகள் அதற்குள் உள்ளடங்கி இருக்கிறது என்றதை மறுக்க முடியாது. பிழையான சக்திகள் தலைமை தாங்குகிறது என்றது உண்மை. அதுக்காக தமிழ் மக்களுக்கு பிரச்சினை இல்லை என்றதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பேரினவாத ஒடுக்கமுறை இல்லை அதுக்கு சமாமான ஒடுக்கமுறையை இவர்களும் செய்கிறார்கள் என்று சமப்படுத்திவிட்டு பிரச்சினையில் இருந்து நாங்கள் தூர நிற்க முடியாது. அல்லது ஜேவிபி சொல்றது போல சோசலிசம் வந்த பிறகு எல்லாம் தானாய் தீரும் என்று சொல் முடியாது.

நாங்கள் சொல்கிறம் என்னவென்றால் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் சரியான தலைமைத்துவத்திற்கு கைமாற்றப்பட வேண்டும். உதாரணத்திற்கு அதை நாங்கள் கட்டம் கட்டமாய் பிரித்து பார்க்க வேண்டும். சேர் பொன் ராமநாதன் தொடக்கம் ஜி ஜி பொன்னம்பலம் வரையிலான காலம். தமிழரசுக் கட்சியினுடைய காலகட்டம், ஆயுதப் போராட்டம் என்ற ஒரு காலகட்டம். இந்த மூன்று காலகட்டமுமே தவறான சக்திகளுக்கூடாகவும் ஆதிக்க சக்திகளுக்கூடாகவுமே வளர்ந்த வந்திருக்கிறது.

ஆகவே நாலாவது கட்டமாக சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாக ஜனநாயகத்தோடு மனித உரிமையோடு இணங்கப்பட்டதாக ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்க இணைந்த சுயாட்சியை வென்றெடுப்பதற்கான உண்மையான சுயநிர்ணய உரிமைப் போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். அது முழு இலங்கை மக்களின் விடுதலையில் ஒரு பகுதியாக அமைய வேண்டும். சிங்கள மக்களை எதிரிகளாகக் கொண்டோ, சிங்கள மக்களை நிராகரித்தோ, சிங்கள மக்களிடம் எங்களுடைய கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை விளங்கப்படுத்தாமலோ, ஒட்டுமொத்தமாக சிங்கள மக்களை ஏகாதிபத்திய வாதிகள் என்று சொல்லி விட்டு போராட்டத்தை நடத்தவியலாது.

தனிமைப்பட்ட போராட்டமாக தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் இன்றைக்கு நிற்கறது. இதற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இப்படிப் பார்க்கிற போது தான் நான்காம் கட்டமாக சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வர்க்க ரீதியான சக்திகளின் தலைமையில முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம். முன்வைக்கிறோம்.

இது தமிழ் தேசியவாதத்தாலோ இந்த விதமான ஆயுத சக்திகளாலோ வென்றேடுக்கப்பட முடியாது. அப்படி வென்றெடுக்கப்படுவதாக இருந்தால் இப்ப சொல்றது போல கொசோவாவிற்கு கொடுத்தது போல தாருங்கோ என்றால், அது நீங்கள் குறிப்பிட்டது போல ஆதிக்க சக்திகளின் கைக்குத் தான் செல்லும். அதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது.

2002 ரணில் - பிரபாகரன் ஒப்பந்தத்திற்கு முன்னர் சிங்கள மக்கள்

மத்தியில நாங்கள் கடுமையான பிரச்சாரங்களை செய்திருந்தனாங்கள். யுத்தத்திற்கு எதிராக பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் சமாதான சூழல் ஏற்படத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்து செயற்பட்டிருந்தோம். சிங்கள பிரதேசங்களுக்கப் போய் யுதத்திற்கு எதிராகப் பேசியிருக்கிறோம். தமிழ் மக்களுடைய பிரச்சினை என்ன என்று நாங்கள் பேசியிருக்கிறோம். இன்றைக்கு அந்த சூழ்நிலை இல்லை. இந்த அரசாங்கம் வந்த பிற்பாடு யுத்தத்தின் மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்ற மயையை சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு தற்காலிகமான ஒரு வலு இருக்கிறது.

நாங்கள் செய்யக் கூடியது அதற்குப் பின்னாலுள்ள தமிழ் மக்களை வர்க்க ரீதியில், சாதிய ரீதியில், வாழ்க்கையில் பின்னுக்கு நிற்கின்ற மக்களை வென்றெடுக்கக் கூடிய வேலைத் திட்டத்தை நாங்கள் முன்வைக்க வேண்டும். அந்த வேைலத் திட்டம் ஒரு பொது வேலைத் திட்டமாக அமைய வேண்டும். சுயநிர்ணய உரிமையில் இருந்து ஜனநாயகத்தை மனித உரிமை யை பிரித்து பார்க்க முடியாது. தனிய பிரிவினைதான் சுயநிர்ணய உரிமை என்ற அர்தப்பாட்டில இருக்க ஏலாது.

வர்க்கப் போராட்டம் என்றது தனியே பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கானது என்பது குறுகிய கண்ணோட்டம். வர்க்கப் போராட்டம் என்றது எல்லோரையும் பொருளாதார ரிதியாக சமப்படுத்துவது மட்டுமல்ல.

அது ஏற்கனவே இருக்கக் கூடிய சமூக அமைப்பை முற்று முழுதாக உடைத்தெறிந்து, அதில் இருக்கக் கூடிய சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் அகற்றுவது தான் வர்க்கப் போராட்டம். சமூக அமைப்பை மாற்றி அமைப்பது. அதில் பிரதானமானது பொருளாதாரம். அதில் என்னத்தைப் பார்க்கிறோம் தனியுடமைப் பொருளாதாரத்தை இல்லாமல் செய்வது.

எங்களுக்க கிடைத்த அனுபவத்தில வர்க்கப் போராட்ட நிலையில் நின்று சாதியத்தை எதிர்த்தது சாதாரணமான விசயமில்லை. அது ஒரு வெற்றி பெற்ற முன் அனுபவம். ஆகவே அந்த அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் செல்கிறோம். தோல்வியடைந்து இருந்தால் மறுபரிசீலனைக்கு நாங்கள் வரலாம். ஆனால் எங்கள் அனுபவம் வெற்றி பெற்றது நிலைத்து நிற்கிறது.

ஏன் மிகுதியான போராட்டத்தையும் அதேவழியில் தொடர முடியாது? சிறுபான்மைத் தமிழர் மகாசபை, திருவள்ளுவர் மகாசபை என்று சங்கம் வைச்சு இருந்த ஒரு காலகட்டம் இருந்தது தான். 1930, 1940 க்களில். அந்த காலகட்டத்திற்கு ஏன் திருப்பிச் செல்வான். மற்றது மார்க்சியத்திற்கு விரோத மாகத் தான் இந்த தலித்திய போக்கு செல்கிறது. வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்கிறார்கள் என்றால் மார்க்சியத்தை நிராகரித்து தான் செல்கிறார்கள்.

அவர்கள் வெளிப்படையாக சொல்கிறார்கள் மார்க்சியம் வெற்றிபெறவில்லை, இதுதான் மார்க்கம் என்று.

இந்தியாவிலேயே அம்பேக்கார் முதல் பெரியார் வரை சாதியத்திற்கு எதிராக போராடி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய போராட்டங்கள் முற்றுப் பெற்றதாகவோ வெற்றி பெற்றதாகவோ பெருமளவு சொல்ல முடியாது. சாதியத்தை அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். கருத்தியல் தளத்தில் உடைத்தெறிந்து உள்ளார்கள். ஆனால் அமைப்பு ரீதியில் முன்னெடுக்க முடியாமல் தானே போய்விட்டது. பெரியாருடைய இயக்கம் எங்கு வந்திருக்கிறது பாருங்கள். தேசியவாதத்திற்குள் தான் வந்து நிற்கிறது. தேசியவாதம் எங்கு வந்திருக்கிறது என்றால் முதலாளித்தவத்திற்குள் மூழ்கி இருக்கிறது. அது மாதத்திர மல்ல உலகமயமாக்கலால தன்னை முழுசாக உலகமயமாக்கலுக்கு வழிகாட்டுவதாகத்தான் இருக்கிறது.

சாதிய ஒடுக்குமுறைக்கு மார்க்சியத்திற் கூடாகவே தீர்வுகாண முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். மாரக்சியம் தான் எல்லா தளங்களிலும் ஒடுக்குமுறைகளையும் சமூக அநீதிகளையும் நீக்கக் கூடிய வல்லமையான கோட்பாடு. வழிகாட்டி. ஏற்பட்ட பின்னடைவுகளை நாங்கள் தோல்வி என்று கருதவில்லை. அது பின்னடைவு தான். அது வரலாற்றில் பல தடவைகள் நிகழ்ந்திருக்கிறது. பின்னடைவது, மீண்டும் எழுச்சி பெறுவது நிகழ்ந்திருக்கிறது. புதிய உலக நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்படலாம். மார்க்சியம் என்பது விறைப்பான ஒன்றல்லவே. புதிய நிலைமைகளை உள்வாங்கி இயங்கியல் கண்ணோட்டத்தில் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப அது மாற்றமடையும்.

தேசம்: மார்க்சியத்தின் மீது வைக்கபடும் குற்றச்சாட்டே அது புதிய விடயங்களை உள்வாங்குவதில்லை என்பது தானே?

அது முற்றிலும் பொய். அப்படியல்ல. அப்படியென்றால் அது வறட்டு மார்க்சியமாகத்தான் இருக்க முடியும்.

யார் வைக்கிறார்கள் என்றால், பின்நவீனத்தவம் பேசுபவர்கள் அதை உள்வாங்கவில்லை என்று அக்குற்றச்சாட்டை வைக்கிறார்கள். பின்நவீனத்தவத்தை எப்படி மார்க்சியம் உள்வாங்க முடியும். பின்நவீனத்துவம் உருவானதே மார்க்சியத்தை உடைப்பதற்கு. உதாரணமாகப் பாருங்கள் வர்க்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தவதில் வலு கவனமாக இருக்கிறார்கள். வர்க்கம் என்று பாவிக்க மாட்டார்கள். விளிம்புநிலை மக்கள், ஓரம்கட்டப்பட்ட மக்கள். சலவைத் தொழிலாளிக்கு சலவைக் கலைஞர் ஏனென்றால் தொழிலாளி என்றால் வர்க்கம் வந்துவிடும். வர்க்கம் என்றதை நிராகரிப்பது மார்க்சியத்தை எதிர்க்கவே. தலித்தியம் அந்த மாதிரித் தானே உருவானது.

வடநாட்டில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்த தலித்திய கருத்தை முதலில்

கையேந்தியது தன்னார்வ நிறுவனங்கள் தான். எத்தனைக்கு எத்தனை அரசசார்பற்ற நிறுவனங்கள் பெருக முடியுமோ அத்தனையும் பெருகிச்சுது. அ மார்க்ஸ் போன்றவை அதை முன்னின்று கையேற்று நடத்தின ஆட்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில தலித்தியம் பேசின ஆரம்பகால ஆட்களிடையேயே ஒற்றுமையில்லை. ரவிக்குமார் ஒரு பக்கம். அ மார்க்ஸ் ஒரு பக்கம். சின்னச் சின்ன குழுக்களெல்லாம் வெவ்வேற திசையில.

இப்ப என்ன பிரச்சினை என்றால் மேற்குநாடுகளில உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியல் வாறதுக்கு தலித்தியம் ஒரு வழி. பத்திரிகைக்காரர்கள். சினிமாக்காரர்கள். எழுத்தாளர்கள். இவை ஒருதரும் இலங்கையை திருப்பிப் பார்க்கிறதில்லையே. ஈரோ, டொலர்ஸ் போக்குவரத்து வசதி. என்னென்று இவர்கள் சமூக விடுதலையை, சமூக அநீதிக்கு எதிராக இயங்க முடியும்.

தேசம்: இந்தியாவில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வரும் தலித்தியம் என்ற கோஸம் அதே கருத்தாக்கத்துடன் இலங்கையிலும் பயன்படுத்தப்படுகிறதே?

ஒரு காலகட்டத்தில பயன்படத்தபடுகின்ற சொல் என்ற அடிப்படையில இருக்கட்டும். பிரச்சினையில்லை. நாங்கள் எங்களுடைய வெளியீடுகளில் அந்தச் சொல்லைப் பயனப்டுத்தவதில்லை. வேறு சிலர் பயன்படத்துகிறார்களோ தெரியாது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகள் இருக்கு. ஆனால் இவை சொல்ற அர்த்தத்தில தலித் என்று வியாக்கியானம் கொடுத்து அதுக்கு ஒரு கொள்கை, கோட்பாடு, வரையறை கொடுப்பதற்கு எதுவுமே அங்கு இல்லை.

தாழ்த்தப்பட்டவர்கள் மாத்திரம் என்பார்கள். பிறகு முஸ்லீம்களும் அடங்கும் என்பார்கள். இப்படிச் சொல்லாடல்கள் இருந்து கொண்டு வருகிறது. இவை சொல்ற அர்த்தத்தில யாழ்ப்பாணத்திற்கோ வடக்கு கிழக்கிற்கோ அது பொருத்தக் கூடியதாய் அந்த சமூக நிலைமை இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினை இருக்கு. அதற்கு தனித்தட்டு வியாக்கியானம் குடுத்து வேற வேற அர்த்தங்கள் கொடுத்து அது ஒரு பிழைப்புவாதம் வியாபாரம் என்றுதான் நான் சொல்லுவன்.

தேசம்: இந்தியாவில் உள்ளது போல் சாதியத்தை பதிவு செய்கின்ற முறை இலங்கையில் இருப்பது நன்மை பயக்கும் என்று கருதுகிறீர்களா?

எங்கட சூழல்லை அப்படி ஒரு சிஸ்டம் இருந்திருந்தால் இப்பவும் சாதியம் இன்னும் வலுவுடையதாக இருந்திருக்கும். அது இல்லாததால எங்களுக்கு சாதியத்தை உடைக்கிறது இலகுவா இருக்கு. இந்தியாவில என்னவென்றால் அது சாதியத்தை வலுப்படுத்தியிருக்கு.

தேசம்: இந்தியாவில் அதற்கான ஒரு தேவையும் இருக்கின்றது இல்லையா?

அது ஒரு பின்தங்கிய சமூகமாக இருக்கிறதால அப்படி ஒரு கோரிக்கை வைக்க வேண்டிய தேவையும் அவைக்கு இருக்கு. இடஒதுக்கீடுகளுக்கு அது தேவை. இட ஒதுக்கீடு வைக்க ஏலாது என்று நாங்கள் சொல்ல ஏலாது அவையுடைய சூழலுக்கு அதுசரி.

எங்களுக்கு உது சாத்தியமா என்றது ஒரு பிரச்சினைக்குரிய விசயம். இது விவாதிக்கப்பட வேண்டும். இந்த போராட்ட சூழல் ஏற்கனவே நடந்த போராட்டங்கள், கிராமங்களின் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு நிலை மைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டு உள்ளது என்ற விசயங்கள் எல்லாம் ஆய்வு ரீதியில் பார்க்கப்பட வேண்டும். ஒட்டுமொத்தமாக தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, பொருளாதார விருத்திக்கு கிராமரீதியில் அடையாளம் காணப்பட வேண்டும்.

தலித்தியத்தை முன்நிறுத்துபவர்கள் சொல்வதைப் பார்த்தால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ளேயே ஆதிக்கத்தை நோக்கி இவர்கள் நகர்வதாகத்தான் உள்ளது. மக்களின் பெயரால் ஒரு அதிகாரம் ஆதிக்கத்தை நோக்கிச் செல்வதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கு. அங்குள்ள கிராம நிலை என்ன? யதார்த்தம் என்ன?

தேசம்: நீங்கள் வடக்கு கிழக்கு இணைய வேண்டும் என்பதை மிகவும் வலியுறுத்துகிறீர்கள். அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன?

பேரினவாத ஒடுக்குமுறை என்பது வளர்ச்சி பெறாமல் உதாரண-மாக பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தில பிரதேச சபைகளைச் சொல்லேக்கை வடக்கு கிழக்கு இணைப்பைச் சொல்லவில்லை. தமிழரசுக் கட்சியும் அதை வற்புறுத்தவில்லை. வடக்குக்கு ஒரு பிரதேச சபை, கிழக்குக்கு ஒரு பிரதேச சபை இரண்டும் விரும்பினால் இணையலாம் என்றது தான் பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டது. அது சரி. ஏனென்றால் எப்பொழுதும் கிழக்கைப் பற்றியும் முஸ்லீம்களைப் பற்றியும் மலையக மக்களைப் பற்றியும் வடக்கில் ஒரு ஆதிக்கப் போக்கே இருந்து வத்தது. அதை மறுக்க முடியாது. சேர் பொன் ராமநாதன் காலத்தில் இருந்தே அந்த அதிக்கப் போக்கு இருந்து வந்தது. அதை தமிழ் தேசியவாதத்தின் பிற்போக்குத் தலைமைகள் முன்னெடுத்து வந்திருக்கின்றன. அந்த வகையில கிழக்கு வந்து சுதந்திரமாக தனிப் பிரதேசமாக சுயாட்சியின் கீழ இருக்க வேண்டும் என்றது சரி. நாங்கள் எங்களுடைய முதலாவது மாநாட்டில் தீர்மானித்தது இரண்டும் சுதந்திரமாக இயங்க வேண்டும். கிழக்கு மக்கள் விரும்பினால் (அரசியல் தலைமைகள் அல்ல) அவை இணைந்து செயற்படலாம் என்று.

ஆனால் கடந்த 30 அண்டுகால அரசியல் அனுபவத்தில நாங்கள் பார்த்தால் கிழக்கில் தான் கூடுதலான குடியேற்றங்களும் பேரினவாத அட்டகாசங்களும் கூடின பகுதியாய் இருக்கு. முஸ்லீம்களையும் தமிழர்களையும் மோதவிடுவது. திருகாணமலையை தனிச்சிங்கள மாவட்டமாக்கும் முயற்சி.

இதெல்லாம் திட்டமிட்ட சிங்கள பேரினவாத நடவடிக்கைகள். வடக்கில இருந்து பிரியுமாக இருந்தால் இது இலகுவாக்கப்படும். மிக இலகுவாக இனவிகிதாசாரம் மாற்றப்படும். இப்பவே மூன்று இனங்களும் சமமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. ஒரு கட்டத்தில என்ன நடக்கும் என்றால், இப்ப அம்பாறையில சிங்களக் குடியேற்றம் கூடிவிட்டது. முஸ்லீம்களின் ஆதிக்கம் குறைந்து விட்டது. தமிழர்கள் துப்பரவாக கீழே போய்விட்டார்கள். இது எதால நடக்கிறது. தனிமைப்படுத்தப்பட்டாதால.

அதிகார அலகுக்கு உட்படாத பிரதேசமாக கிழக்கு மாகாணம் இருக்கும் போது அது பலவீனம் அடையும். அதால தான் நாங்கள் சொல்கிறோம் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசம் இன்றைக்குத் தேவை. நாளைக்கு ஒரு ஜனநாயகமான சூழ்நிலை வந்து கிழக்கு மாகாணம் தன்னையே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமை வருமென்றால், அது தனியாகச் செல்வதில் பிரச்சினையில்லை. நாங்கள் ஆதிக்க கண்ணோட்டத்தில் இருந்து இதைச் சொல்லவில்லை. நாங்கள் வடக்கு கிழக்கு முழுத் தேசிய இனத்தின் கண்ணோட்டத்தில் தான் சொல்கிறோம். மற்றது பாரம்பரிய பிரதேசங்கள். நிலத் தொடர்பு இருக்கு. பண்பாட்டு ரீதியான தொடர்பு இருக்கு. மொழி. தனித்து நிற்க வேண்டிய அவசியம் இன்றைக்கு இல்லை.

முஸ்லீம் மக்களுக்கும் கூட இதுதான் நாங்கள் சொல்லக் கூடிய விசயம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீதிமன்றத் தீர்ப்பால் பிரிக்கப்பட்டதை சில முஸ்லீம் அமைப்புகள் வரவேற்றுது. ஆனால் இன்றைக்கு என்ன நடந்தது. முஸ்லிம்களும் கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். திகவாவி புனிதபிரதேசம் என்று சொல்லிவிட்டு குடியேற்றத்திட்டம் நடக்கிறது. ஆனால் முஸ்லீம் காங்கிரஸ் வடக்கு கிழக்க இணைப்பை ஆதரிக்கிறது.

தேசம்: புதியஜனநாயகக் கட்சி வடக்கு கிழக்கில் ஒடுக்கபட்ட மக்களுக்கான தீர்வுத் திட்டங்களாக அரசியல் கோட்பாடுகளாக எதை முன் வைக்கிறீர்கள்?

நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று பிரத்தியேகமாக இல்லை. ஆனால் வர்க்கரீதியாக பார்க்கின்ற போது தாழ்த்தப்பட்ட மக்களே முன்னிலை வகிக்கிறார்கள். இன்றைக்கு பார்த்தீர்கள் என்றால் கோவிய சமூகம் என்றொரு சமூகம் இருக்கு. அவை கல்வி, பொருளாதாரம், நிலம் என்று பண்பாட்டு ரீதியான எந்த வளர்ச்சியும் இல்லாத ஒரு சமூகம். இந்த சமூகம் இடைச்சாதி சமூக நிலைக்குள் தான் வருகிறது. ஆனால் வர்க்க நிலையில தாழ்த்தப்பட்ட சமூகத்தோடு நிற்கக் கூடிய சமூகமாகத்தான் வாழ்நிலை இருக்கிறது. அப்ப இவையை தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குள் சேர்க்கிறதா? இடைநிலைச் சமூகம் என்று சேர்க்கிறதா? என்றொரு பிரச்சினை வருகிறது. ஆனால் வர்க்க ரிதியில் நோக்கேக்க இவைக்கு வைக்கக் கூடிய கோரிக்கையும், அவைக்க வைக்கக் கூடிய கோரிக்கையும் ஒன்றுதான். வெள்ளாளர்களிலும் நிலம் இல்லாதவர்கள்

இருக்கிறார்கள். கூலி விவசாயிகள் இருக்கிறார்கள். இவர்களைப் புறந்தள்ள முடியாது.

தேசம்: சாதியம் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. அந்த மக்களுக்கான விடுதலை அவசியம். அந்த மக்களுக்கான விடுதலையை கோருவதற்கான வேலைத் திட்டமாக புலம்பெயர்ந்த மக்களுக்கு என்னத்தைச் சொல்ல விரும்புகிறீர்கள்?

யுத்தம் முக்கிய தடையாக இருக்கிறது. புலம்பெயர் நாடுகளில உள்ளவை பெயரளவில ஒரு கொள்கையை வகுக்க முடியுமே ஒழிய, நடைமுறை ரீதியாக அங்கு நடைமுறைப்படத்தவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அது அரசியல் தீர்வினூடாக தமிழ் மக்களுயை உரிமைகள் நிலைநாட்டப்படும் போதோ, சமாதான சூழல் வந்து அங்கு ஜனநாயக சூழல் ஏற்படம் பட்சத்தில தான் அதுக்கான வேலைத் திட்டங்களைப் பற்றி பேசமுடியும்.

நாங்கள் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடியாது. நாங்கள் ஒரு அமைப்பு தொடங்க இருந்தனாங்கள். சமூக நீதிக்கு எதிரான மக்கள் இயக்கம் என்று பெயரும் தீர்மானிச்சுப் போட்டம். ஒருத்தரும் முன்னுக்கு வரத் தயாரில்லை. சுதந்திரமாக இயங்க முடியாது. ஜனநாயகச் சூழல் இருந்தால் எத்தனையோ விசயங்களைச் செய்யலாம்.

ஜனநாயகம், மனிதஉரிமை என்றதும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றதும் மிக அவசியம். இந்த மூன்றையும் முன் வைத்தால் அவர் துரோகி.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினையை தலித் என்ற பெயரிலை யோ என்ன பெயரிலையோ அவைக்குரிய பிரச்சினையை உண்மையாகவே அவைக்குரிய பின்புலத்தில வைத்து அடையாளம் காண்கிறதும் பிரச்சாரப் படுத்துவதும் தேவையானது. அது மறுக்கப்படக் கூடாது. மறைக்கப்படக் கூடாது. அப்படி ஒன்று இல்லையென்று வாதாடக் கூடாது. இதனை இந்த இயங்கங்களுடைய மோதல்களுக்கோ வேறுபாடுகளுக்கோ ஆளையால் பழி தீர்க்கும் கருவியாகவோ பயன்படுத்தக் கூடாது என்றது முக்கியம். வேறு நோக்கங்களுக்கு திசை திருப்பப்படாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். நேர்மையாக அந்த மக்கள் சம்பந்தமாக பேச விரும்பினால் அதை யாரும் பேசலாம்.

தேசம்: கட்சியுடைய அண்மைய எதிர்காலம் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

கடந்த காலத்திலே ஒரு கசப்பான அனுபவம் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் பின்னடைவைக் கண்டது. ஏகாதிபத்தியத்தினுடைய

நடவடிக்கைகள், உட்கட்சிப் பலவினங்களாலும் அந்த நிலைமை வந்துவிட்டது. எங்கள் கட்சி உட்பட. அதில சரி பிழை என்ற பல விசயங்கள் இருக்கு. அதுக்கு அப்பால மாரக்சிச லெனினிச இயக்கத்தை முன்னெடுக்க வேண்டிய ஒரு அடிப்படை வரலாற்றுக் கடமை ஒன்று எங்களுக்கு இருக்கு. சிறிய சக்தி பெரிய சக்தி என்பதல்ல பிரச்சினை. சரியான இலக்கை நோக்கி சரியான கொள்கையை முன்னெடுக்க வேண்டும். அதை நாங்கள் உயிரைப் பணயம் வைத்தும் செய்கிறோம். பல முனைகளில் இருந்தும் துப்பாக்கிகள் தயாராக இருக்கிற நிலைமை. எங்கள் தோழர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இலங்கையின் இடதுசாரிப் பரப்பில் பல சிக்கல்கள். கடுமையானது. கஸ்டமானது தான். ஆனால் வரலாற்றுக் கடமையில் இருந்து நாங்கள் பின்வாங்க முடியாது. எங்களை நம்பி அந்தநாளைய போராட்டங்களில் கண்ணீர், பசி, பட்டினிக்கூடாக வந்த அந்த மக்கள் இன்றைக்கும் நம்பிக்கையோட இருக்கிறார்கள். கொழும்புக்கு வர முடியாத பொருளாதார வறுமையில் உள்ள மக்கள் எங்கள் கட்சியை நம்பி இருக்கிறார்கள்.

நாங்கள் யாரையும் எந்த ஒரு இயக்கத்தையும் பகைநிலையில் வைத்து பார்க்கவில்லை. கடந்த காலத்தில் அது தான் எங்களுக்கு கிடைத்த வெற்றி. எந்த ஒரு இயக்கத்திற்கு பின்னாலும் இழுபட்டுச் செல்லவும் இல்லை. எங்கட தனித்துவ அடையாளத்துடன் இருந்து வேலை செய்கிறோம். வடக்கு கிழக்கில கஸ்டம். மலையகத்தில சாதகமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. இளைஞர்கள் தொழிற்சங்கங்களோடு இணைந்து வேலை செய்கிறோம்.

சர்வதேசச் சூழலும் எங்களுக்கு சாதகமான சூழலை மாற்றமடையச் செய்து கொண்டு வருகிறது. நேபாளம் ஒரு பரி சோதனைக் களமாக இருக்கிறது. அதோ டு தென்னமேரிக்க நாடுகளில எழுகி ற ஏபாதிபத்திய எதிர்ப்பு எழுச்சிகள். இந்தியாவில வரக்கூடிய மாற்றங்கள். அது ஒரு இயக்கம் என்று சொல்ல வரவில்லை பல இயக்கங்கள். எந்த விதத்திலும் வர்க்கப் போராட்டத்திலோ மார்க்சிய லெனினய பாதையிலோ நம்பிக்கை இழப்பதற்கான எந்த அறிகுறியையும் நாங்கள் காணவில்லை. வர்க்கப் போராட்டத்திலும் மார்க்சிய லெனினிய பாதையிலும் உறுதியொடு இருக்கிறோம். அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கக் கூடிய வேலையைத் தான் நாங்கள் செய்து வருகிறோம்.





ஓவியம்: கே டானியல் நினைவு மலர். நன்றி

சாதி அமைப்பு தகரட்டும்! சமத்துவ நீதி ஓங்கட்டும்!!

1966 ஒக்ரோபர் எழுச்சி